بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

தொகுதி 9

இதழ் 24 & 25

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1445 துல்ஹஜ் 06 - 13 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1403 இஹ்ஸான் 13 - 20 ★ 13 - 20 ஜூன் 2024


## அல்லாஹ்வின் கட்டளை

فَمَنۡ اَظۡلَمُ مِمَّنِ افۡتَرٰی عَلَی اللّٰہِ کَذِبًا اَوۡ کَذَّبَ بِاٰیٰتِہٖ ؕ اِنَّہٗ لَا یُفۡلِحُ الۡمُجۡرِمُوۡنَ ۞۱۸

பொருள்

அல்லாஹ்வுக்கு எதிராகப் பொய்யை இட்டுக்கட்டுபவனை விடவும் அல்லது அவன் அடையாளங்களைப் பொய்யாக்குபவனை விடவும் பெரும் அநீதியிழைப்பவன் எவன்? நிச்சயமாக குற்றவாளிகள் ஒருபோதும் வெற்றி பெறுவதில்லை. (யூனுஸ்: 18)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**எந்த நபர் திருக்குர்ஆனின் பக்கம் கவனம் செலுத்தாமலும் மற்ற நூல்களில் இரவும், பகலும் மூழ்கியும் இருக்கின்றாரோ அவர் பெரும் ஈமான் அற்ற நபர் ஆவார்.**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதி மொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான**
**ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து**

நம்மிடத்தில் திருக்குர்ஆன் இருக்கவில்லையென்றால், மேலும் ஹதீஸ்களின் இந்த தொகுப்புகள் மட்டுமே பெருமைக்குரிய ஈமானாகவும், கொள்கையாகவும் இருந்திருந்தால் பின்னர் மற்ற சமுதாயங்களிடம் வெட்கத்தால் முகத்தைக் கூட காட்டியிருக்க முடியாது. நான் திருக்குர்ன் என்ற சொல்லை ஆழ்ந்து சிந்தித்தேன். அப்போது, இந்த அருளுக்குரிய சொல்லில் ஒரு வலுவான முன்னறிவிப்பு இருப்பது எனக்கு தெளிவாக்கப்பட்டது. அது இதுவாகும். அதாவது இந்த திருக்குர்ஆன் தான் படிப்பதற்கு தகுதி வாய்ந்த வேதம் ஆகும். மேலும், ஒரு காலத்திலோ இன்னும் அதிகமாக இதுவே படிப்பதற்கு தகுதி வாய்ந்த வேதமாக இருக்கும். அப்போது, வேறு நூல்களும் படிப்பதற்கு அதனுடன் இணைக்கப்படும். அந்நேரத்தில் இஸ்லாத்தின் கண்ணியத்தை பாதுகாப்பதற்காகவும், பொய்களை வெளிப்படுத்துவதற்கும் இந்த ஒரு வேதம் மட்டுமே படிப்பதற்கு தகுதி வாய்ந்ததாக இருக்கும். மேலும் மற்ற வேதங்கள் நிச்சயமாக கைவிட்டு விடுவதற்கு தகுதியானவையாக இருக்கும். ஃபுர்கான் என்பதற்கும் இதுவே பொருளாகும். அதாவது இந்த ஒரு வேதமே உண்மை மற்றும் பொய்யை வேறுபடுத்தக் கூடியதாக இருக்கும். மேலும், வேறு எந்த ஹதீஸோ அல்லது வேறு எந்த வேதமோ இந்த அந்தஸ்தையும், தகுதியையும் பெற்றிருக்காது. (கூறினார்கள்: மேலும் மிகவும் உத்வேகத்துடன், வலியுறுத்தியும் கூறினார்கள்) தற்போது மற்ற எல்லா நூல்களையும் விட்டு விடுங்கள். மேலும், பகலும், இரவும் அல்லாஹ்வின் வேதத்தை ஓதுங்கள். எந்த நபர் திருக்குர்ஆனின் பக்கம் கவனம் செலுத்தாமலும் மற்ற நூல்களில் இரவும், பகலும் குனிந்து இருக்கின்றாரோ அவர் பெரும் ஈமான் அற்ற நபர் ஆவார்.

திருக்குர்ஆனை ஓதுவதிலும், சிந்திப்பதிலும் உயிராலும், உள்ளத்தாலும் மும்முரமாகி விடுங்கள். மேலும், ஹதீஸ்களின் பணிகளை கைவிட்டு விடுங்கள். ஹதீஸ்களுக்கு வழங்கப்படுவதைப் போன்று திருக்குர்ஆனிற்கு கவனம் வழங்கப்படுவதுமில்லை; படிப்பிக்கப்படுவதுமில்லை. தற்போது நீங்கள் திருக்குர்ஆனின் ஆயுதத்தை கையில் ஏந்துங்கள்; அவ்வாறு செய்தால் உங்களுக்கு வெற்றி கிடைக்கும். இந்த ஒளிக்கு முன்னால் எந்த இருளும் நிற்க முடியாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 9, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

**மஸ்ஜித் நம்பிக்கையாளர் ஒன்றுகூடுவதற்கான இடமாகும். மேலும் துஆக்கள் மற்றும் இறை தியானத்திற்கான இடமாகும். அது போன்ற இடத்திலிருந்து உண்மையான நேசமும் தொடர்பும் கொண்ட ஒரு மனிதனால் பிரிந்து செல்லவே முடியாது**

وَاِذۡ بَوَّاۡنَا لِاِبۡرٰہِیۡمَ مَکَانَ الۡبَیۡتِ اَنۡ لَّا
تُشۡرِکۡ بِیۡ شَیۡئًا وَّطَہِّرۡ بَیۡتِیَ لِلطَّآئِفِیۡنَ
وَالۡقَآئِمِیۡنَ وَالرُّکَّعِ السُّجُوۡدِ ۞۲۷

பொருள்:

மேலும் இப்ராஹீமுக்கு அந்த வீட்டின் நிலத்தை ஒதுக்கி, என்னுடன் எதையும் இணையாக்காதீர். மேலும் எனது வீட்டை வலம் வருபவர்களுக்காகவும் (தொழுகையில்) நிற்பவர்களுக்காகவும், குனிபவர்களுக்காகவும் சிரம் பணிந்து விழுபவர்களுக்காகவும் தூய்மைப் படுத்துவீராக (என்று கூறிய நேரத்தை நினைத்துப் பார்ப்பீராக). (22:27)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மேற்கண்ட வசனத்திற்கு வழங்கிய விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

உலகின் அனைத்து மஸ்ஜித்களும் அல்லாஹ்வின் இல்லங்களாகும். ஏனெனில், அவையும் இறைவனை நினைவுகூர்வதற்காக மட்டுமே அமைந்துள்ளன. மேலும் பைத்துல்லாஹ்வின் நிழலாக அல்லாஹ் அவற்றை நிலைநாட்டியுள்ளான். ஏனெனில், இந்தக் கட்டளைகள் பைத்துல்லாஹ்விற்கு மட்டுமே உரியதல்ல. மாறாக, ஒவ்வொரு மஸ்ஜிதிற்கும் நிழல் வடிவில் பொருந்துகின்றன. இந்த பார்வையுடன் சிந்தித்துப் பார்த்தால் பின்னர் இந்த விஷயம் தெரிய வருகின்றது. அதாவது, இந்த வசனத்தில் பள்ளிவாசல்களின் மூன்று நோக்கங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஒன்று, மஸ்ஜித்கள் ஏன் கட்டப்படுகின்றன என்றால், பயணிகள் அவற்றிலிருந்து பயன் பெற வேண்டும்.

இரண்டு, மஸ்ஜித்கள் ஏன் கட்டப்படுகின்றன என்றால், அவற்றிலிருந்து அந்த நகரத்தில் வசிக்கக் கூடியவர்கள் பயன் பெற வேண்டும்.

மூன்று: ருகூ மற்றும் ஸஜ்தா செய்யக் கூடியவர்கள் அதாவது

**இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம்....**

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் அபூ ஸலமா (ரலி) ஸரிய்யா & ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உனைஸ் (ரலி) ஸரிய்யா மற்றும் ரஜீஃ ஸரிய்யா ஆகியவற்றின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்விலிருந்து ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள்**

எந்தப் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே பங்கு பெறாமல் பிறரைப் போர் பணிக்காக அனுப்பி வந்தார்களோ அந்தப் போர் பணிகள் ஸரிய்யா என்று கூறப்படுகிறது

ஸுஃப்யான் பின் காலித் மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்காக ஒரு படையைத் திரட்டியிருந்தான் என்பது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தெரிய வந்த போது, அன்னார் (ஸல்) தனித்துவம் வாய்ந்த, நுட்பமான, இந்தவொரு போர்த் தீர்மானத்தை எடுத்தார்கள். அதாவது ஒரு படையை ஆயத்தம் செய்து, ஸுஃப்யானை எதிர்த்துப் போரிட அனுப்பி வைத்து, இரண்டு பக்கமும் இரத்தம் சிந்துவதற்கு பதிலாக நுட்பமான செயலால் அந்தக் கிளர்ச்சிப் படையை ஆயத்தம் செய்தவனையே துவக்கி வைத்தவனையே கொன்று விடுவது அதிகம் பொருத்தமாக இருக்கும்

அன்னார் (ஸல்) மனித உயிர்களைக் கருத்தில் கொண்டதன் நிலையோ இதுவாகும். அதாவது எதிரி கோத்திரங்களின் மக்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காக அவர்களின் மற்ற மக்கள் தப்பித்துக் கொள்ளும் பொருட்டு ஓர் உயிரைக் கொல்வது சிறந்ததாகும் என்ற சாதுர்யமான செயலை மேற்கொண்டார்கள்.இது மனித அனுதாபத்தின் உச்சகட்டம் ஆகும்

ஏமன் மற்றும் பாகிஸ்தானின் இறை வழிக் கைதிகளுக்காகவும், பாலஸ்தீன மக்களுக்காகவும் துஆவிற்கான அறிவுரை

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 10 மே 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **ஹிஜ்ரத் மாதம் 10 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

இன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தின் சில போர்ப் படைகள் பற்றி எடுத்துக் கூறுவேன். இது தொடர்பாக முதலில் பனூ அஸத் கோத்திரத்தின் தீங்கிழைத்தல் மற்றும் அபூ ஸலமாவுடைய ஸரிய்யா பற்றி கூறப்படும். எந்தப் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே பங்கு பெறாமல் பிறரைப் போர் பணிக்காக அனுப்பி வந்தார்களோ அந்தப் போர் ஸரிய்யா என்று கூறப்படுகிறது. இவற்றிலும் அன்னாருடைய வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள் தெளிவுபடத் தெரிகின்றன. அன்னாருடைய நுட்பமான அறிவு மற்றும் அன்னார் (ஸல்) முஸ்லிம்களை எவ்வாறு தற்காத்தார்கள்? மேலும் பிறருக்காகவும், பகைவர்களுக்காகவும் எவ்வளவு அனுதாபத்தை வெளிப்படுத்தினார்கள்? போன்ற அனைத்து விஷயங்களைக் குறித்தும் இந்தப் போர்ப் படைகள் மூலமாகவும் அன்னாரது அழகிய முன்மாதிரி தெளிவுபடத் தெரிகின்றது.

எவ்வாறு இருப்பினும், இந்தப் போர் ஹிஜ்ரீ 4-ம் ஆண்டு முஹர்ரம் மாதம் நடைபெற்றது. ஹஸ்ரத் அபூஸலமா பின் அப்தில் அஸத் மஃஹ்ஸூமீ (ரலி) அவர்கள் இதை வழிநடத்தினார்கள். அபூ ஸலமா (ரலி) அவர்களின் பெயர் அப்துல்லாஹ் ஆகும். சுட்டுப் பெயர் அபூ ஸலமா (ரலி) ஆகும். இவர்களின் தாயார் பர்ரஹ் பின்த் அப்தில் முத்தலிப் ஆவார்கள். இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குத் தந்தையின் சகோதரி வழியில் வந்த சகோதரர் ஆவார்கள். இவர்கள் அபூ லஹபின் அடிமைப் பெண் சுவைபாவிடம் பால் குடித்திருந்தார்கள். ஹஸ்ரத் உம்முல் முஃமீனீன் உம்மு ஸலமா முதலில் இவர்களின் நிக்காஹ்விலேயே இருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூ ஸலமா(ரலி) அவர்கள் பத்ர் மற்றும் உஹது போர்களில் கலந்து கொண்டார்கள். உஹது போரில் இவர்கள் காயமடைந்தார்கள். ஒரு மாதம் வரை அதற்கு சிகிச்சை செய்து வந்தார்கள். வெளிப்படையாக அந்தக் காயம் சரியாகி விட்டது. மேலும், அந்தக் காயம் எப்படி குணமாகி விட்டது என்றால், அதை யாராலும் அடையாளம் காண முடியாமல் இருந்தது.

இந்தப் போரின் பின்னணி இவ்வாறு வருகிறது. மதீனாவில் வாழ்ந்து வந்த நயவஞ்சகர்களும், யூதர்களும் உஹது போரின் நிலைமைகள் மற்றும் நிகழ்வுகளினால் மகிழ்ச்சியைக் கொண்டாடத் துவங்கி விட்டார்கள். மீண்டும் ஒருமுறை அவர்களுடைய உள்ளத்தில் முஸ்லிம்களை விரைவில் ஒழித்துக் கட்டுவதற்குத் திட்டம் வகுக்கலாம் என்ற சிந்தனைகள் வரத் துவங்கின. இவ்வாறே மதீனாவின் சுற்றுவட்டாரத்தில் வாழ்ந்து வந்த கோத்திரங்களில் எவை பத்ர் யுத்தத்தில் முஸ்லிம்களின் மகத்துவமிக்க வெற்றியினால் அச்சமடைந்து இருந்தனவோ அவர்களுடைய உள்ளத்திலும், உஹது போரில் முஸ்லிம்களுக்கு போதுமான அளவு இழப்பு ஏற்பட்டு விட்டது; எனவே முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுத்து அவர்களுக்கு மேலும் இழப்பை ஏற்படுத்துவதற்கும், சூறையாடுவதன் மூலமாக அவர்களுடைய செல்வங்களையும், பொருள்களையும் பெற்றுக் கொள்வதற்கும் நல்ல (ஒரு) சந்தர்ப்பம் என்ற சிந்தனை துளிர் விடத் துவங்கியது.

ஆக, உஹது போர் நடந்து முடிந்து இரண்டு மாதங்கள்தான் ஆகியிருந்தன ; அதற்குள் இந்த கோத்திரங்களிலிருந்து எந்தக் கோத்திரம் முதல் முதலாக முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்க இருந்ததோ அது பனூ அஸத் பின் ஃஹூஸைமா ஆகும். இந்த மக்கள் நஜத் பகுதியில் வாழ்ந்து வந்தார்கள். அந்தக் கோத்திரத்தின் தலைவன் துலைஹா பின் ஃஹூவைலத் மற்றும் அவனுடைய சகோதரன் ஸலமா பின் ஃஹூவைலத் ஆகியோர் மக்களை ஒன்றிணைத்து ஒரு படையை ஆயத்தம் செய்தார்கள்.

முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்கக் கூடாது என்று அறிவுரை வழங்கியவாறு பனூ அஸத் கோத்திரத்தின் கைஸ் பின் ஹாரிஸ் பின் உமைர் என்ற ஒரு நபர் தனது சமுதாயத்திற்கு இவ்வாறு கூறினார்; எனது சமுதாயமே! இது புத்திசாலித்தனமான விஷயமல்ல; நமக்கு முஸ்லிம்கள் தரப்பிலிருந்து எந்த விதமான இழப்பையும் எதிர் கொள்ள வேண்டியது வரவில்லை ; மேலும் சூறையாடுவதற்காக முஸ்லிம்கள் நம் மீது தாக்குதல் தொடுக்கவுமில்லை; நம்முடைய பகுதி யஸ்ரபில் இருந்து, அதாவது மதீனாவில் இருந்து தொலைவிலும் இருக்கிறது; நம்மிடம் குறைஷியர்கள் போன்ற படையும் இல்லை. குறைஷியர்கள் சுயமே ஒரு நீண்ட காலம் வரை அரேபியர்களிடம் இவர்களுக்கெதிராக உதவி கோரி வந்தார்கள். அவர்களுக்கோ இவர்களிடம் பழிவாங்க வேண்டியும் இருந்தது. பிறகு அவர்கள் ஒட்டகங்கள் மீது பயணித்தும், குதிரகளின் கடிவாளங்களைப் பிடித்துக் கொண்டும் புறப்பட்டார்கள். அவர்கள் 3000 போர் வீரர்களையும் தம்மை பின்பற்றுபவர்களின் ஒரு பெரும் எண்ணிக்கையையும் உடன் அழைத்துச் சென்றார்கள். பல ஆயுதங்களும் இருந்தன. அதற்கு நிகராக உங்களின் கதி என்ன? மிஞ்சி மிஞ்சி போனால் நீங்கள் 300 பேரை அழைத்துக் கொண்டு புறப்படுவீர்கள். இவ்வாறு உங்களையே நீங்கள் ஏமாற்றத்தில் ஆழ்த்திக் கொள்வீர்கள்.

உங்களுடைய பகுதியை விட்டு

தொலைவில் சென்று விடுவீர்கள். மேலும் நீங்கள் இன்னலில் சிக்கிக் கொள்வீர்கள் என்று நான் அஞ்சுகிறேன். ஆனால் அவர்கள் கைஸ் உடைய அறிவுரையை ஏற்கவில்லை. மறுபுறம் மதீனா முனவ்வரா மீது தாக்குதல் தொடுப்பதற்கான பனூ அஸத் கோத்திரத்தின் திட்டம் பற்றிய தகவல் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வரை சென்றடைந்தது. எப்படி என்றால், தே கோத்திரத்தின் ஒரு மனிதர் வலீத் பின் ஸுஹைர் மதீனாவுக்கு வந்தார். அவர் தன் சகோதரனின் மகள் ஸைனப் அவர்களைப் பார்க்க வந்திருந்தார். அவர்கள் துலைப் பின் உமைர் வஹப் (ரலி) அவர்களின் மனைவியாக இருந்தார்கள். அவர் பனூ அஸத் கோத்திரத்தின் மேற்கூறப்பட்ட திட்டத்தைப் பற்றி தகவல் தெரிவித்தார்.

எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பனூ அஸத் கோத்திரத்தினர் மதீனா மீது தாக்குதல் தொடுப்பதற்கு முன்னர் சுயமே முஸ்லிம்கள் தங்களது பாதுகாப்பிற்காக அவர்களுடைய பகுதி மீது தாக்குதல் தொடுக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.எனவே அன்னார்(ஸல்) ஹஸ்ரத் அபூ ஸலமா பின் அப்தில் அஸதை வரவழைத்தார்கள். மேலும் அவர்களிடம் இந்தப் போருக்காக புறப்படுவீராக! நான் உம்மை அதற்கு பொறுப்பாளராக நியமித்துள்ளேன் என்று வழிகாட்டல் வழங்கினார்கள்.

இதற்குப் பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவருக்காக கொடியைக் கட்டினார்கள். மேலும், இவ்வாறு வழிகாட்டல் வழங்கினார்கள்; பனூ அஸத் உடைய பகுதி வரை உமது பயணத்தைத் தொடர்வீராக! அதன் படை உமக்கு எதிராக ஒன்றுதிரள்வதற்கு முன்னர் அங்கு சென்றடைந்து அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து விடுவீராக! கண்ணியத்திற்குரிய 150 ஸஹாபாவை உள்ளடக்கிய படை அபூ ஸலமாவின் தலைமையில் அந்தக் கோத்திரங்களை வேரறுப்பதற்காக புறப்பட்டது.

தே கோத்திரத்தின் வலீத் பின் ஸுஹைர் என்ற அந்த மனிதர் வழிகாட்டியாக அவர்களுடன் இருந்தார். அதாவது வழிகூறுபவராக அவர்களுடன் இருந்தார். அந்தப் போரில் கலந்து கொண்ட சில ஸஹாபா பெருமக்களின் பெயர்கள் பின்வருமாறு:

அபூ ஸப்ரஹ் பின் அபீ ருஹ்ம், அப்துல்லாஹ் பின் ஸுஹைல் பின் அம்ர், அப்துல்லாஹ் பின் மக்ஸமா ஆமிரீ, முஅத்தப் பின் ஃபஸ்ல், அர்கம் பின் அபீ அர்கம், அபூ உபைதா பின் ஜர்ராஹ், ஸுஹைல் பின் பைஸா, உஸைத் பின் ஹுஸைர் அன்ஸாரீ, அப்பாத் பின் பிஷ்ர் அன்ஸாரீ, அபூ நாயிலா அன்ஸாரீ, அபூ அபஸ் கத்தாதா பின் நுஃமான், நஸ்ர் பின் ஹாரிஸ், அபூ கத்தாதா அன்ஸாரீ, அபூ அய்யாஷ் சுரக்கீ, அப்துல்லாஹ் பின் ஸைத் அன்ஸாரீ, ஃஹுபைப் பின் யசாஃப், ஸஃது பின் அபீ வக்காஸ், அபூ ஹுஸைஃபா பின் உத்பா மற்றும் ஸாலிம் மவ்லா அபூ ஹுஸைஃபா.

கண்ணியத்திற்குரிய ஸஹாபிகள் தமது இந்தப் போர்த் திட்டத்தை மறைமுகமாக வைத்தவாறு மிக விரைவாக எதிரி வரை சென்றடைய வேண்டும் என்பதற்காக பொதுவான வழியை விட்டு விலகி வேகமாக சென்றார்கள். அவர்கள் இரவு பகலாக தொடர்ச்சியாக இந்தப் பயணத்தை மேற்கொண்டார்கள். ஓர் அறிவிப்புக்கு ஏற்ப பகலின் ஒரு பகுதியில் இவர்கள் மறைந்து கொள்வார்கள்; இரவில் பயணம் செய்வார்கள். இவ்வாறு நான்கு நாட்கள் பயணத்திற்குப் பிறகு இவர்கள் கதன் மலைக்கு அருகில் சென்றடைந்து விட்டார்கள்.

கதன் தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: இது ஃபைத் எனும் இடத்துக்கு அருகில் உள்ள ஒரு மலையின் பெயராகும். ஃபைத் என்பது கூஃபாவுக்கு செல்லும் வழியில் உள்ள ஒரு வழியிடைத் தடத்தின் பெயராகும். அங்கு பனூ அஸத் பின் ஃஹுஸைமாவின் நீரூற்று இருந்தது. முஸ்லிம்கள் அங்கு சென்றடைந்ததுமே தாக்குதல் தொடுத்து அவர்களுடைய கால்நடைகளைக் கைப்பற்றிக் கொண்டார்கள். மேலும் அவர்களுடைய மேய்ப்பாளர்களில் மூவரைப் பிடித்து விட்டார்கள். மற்றவர்கள் தப்பி ஓடுவதில் வெற்றி கண்டு விட்டார்கள்.

தப்பி ஓடியவர்கள் பனூ அஸதின் கூடாரத்தைச் சென்றடைந்து முஸ்லிம்களின் படை வந்து சேர்ந்து விட்டதையும் அவர்கள் தாக்குதல் தொடுத்தது பற்றியும் தகவல் கொடுத்தார்கள். அபூ ஸலமாவின் படையின் எண்ணிக்கையை மிகவும் மிகைப்படுத்திக் கூறினார்கள்.இவ்வளவு பெரிய படை என்று அந்த மேய்ப்பாளர்களும் மிகவும் மிகைப்படுத்திக் கூறினார்கள்.

அதனால் அவர்களுக்கு இன்னும் அதிகம் அச்சம் ஏற்பட்டு விட்டது. அதனால் பனூ அஸத் அச்சத்திற்குள்ளானார்கள். மேலும் முஸ்லிம்கள் திடீரென்று சென்றடைந்ததனால் எவ்வளவு திகில் உண்டானது என்றால், அவர்கள் அச்சப்பட்டு இங்கும், அங்கும் ஓடி விட்டார்கள். ஹஸ்ரத் அபூ ஸலமா (ரலி) அவர்கள் பனூ அஸதின் கூடாரங்களின் இடத்தை அடைந்ததும், எதிரி ஓடிவிட்டான் என்பதைக் கண்டதும் அவர்கள் அவர்களைத் தேடி தம்முடைய தோழர்களை அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் அபூ ஸலமா (ரலி) அவர்கள் அவர்களை மூன்று பகுதிகளாகப் பிரித்தார்கள். ஒரு பகுதி அவர்களுடன் இருந்தது. மற்ற இரண்டையும் இருவேறு திசைகளில் அனுப்பினார்கள். அத்துடன் எதிரியைப் பின்தொடர்ந்தவாறு வெகு தொலைவில் சென்று விட வேண்டாம். எதிரியை நேருக்கு நேர் சந்திக்கவில்லை என்றால் திரும்பி வந்து இரவு என்னுடன் தங்குங்கள் என்று வழிகாட்டலும் வழங்கினார்கள்.

பிரிந்து விடக் கூடாது; ஒன்றாகவே இருங்கள் என்றும் வலியுறுத்திக் கூறினார்கள். ஆனால், எதிரி பயந்து போய் எவ்வளவு வேகமாக ஓடினான் என்றால், முஸ்லிம்கள் யாரையும் நேருக்கு நேர் சந்திக்கவில்லை. ஹஸ்ரத் அபூ ஸலமா (ரலி) அவர்கள் எல்லாப் போர்ச் செல்வங்களுடனும் மதீனாவை நோக்கி திரும்பி செல்லும் பயணத்தைத் துவங்கினார்கள். வழிகாட்டுவதற்காக உடன் சென்றிருந்தவர் அவர்களுடனே திரும்பி வந்தார். ஓரிரவு பயணத்தைக் கடந்த பின்னர் ஹஸ்ரத் அபூ ஸலமா (ரலி) அவர்கள் போர்ச் செல்வத்தைப் பிரித்துக் கொடுத்தார்கள்.

அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக ஐந்தில் ஒரு பங்கை தனியாக எடுத்து வைத்தார்கள். வழிகாட்டிய நபருக்கு அவர் மகிழ்ச்சியடைவதற்கு ஏற்ப பொருளை வழங்கினார்கள். மேலும், மீதமிருந்த போர்ச் செல்வங்களை ஸஹாபா பெருமக்கள் மத்தியில் பிரித்துக் கொடுத்து விட்டார்கள். ஒவ்வொரு ஸஹாபிக்கும் ஏழு, ஏழு ஒட்டகங்களும் பல ஆடுகளும் கிடைத்தன. இவ்வாறு மீதமிருந்த பயணத்தைக் கழித்தவாறு இந்த மக்கள் மகிழ்ச்சியுடன் ஏறத்தாழ பத்து நாள்களுக்குப் பிறகு மதீனாவுக்குத் திரும்பி வந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அபூ ஸலமா (ரலி) அவர்களின் மரணம் தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அபூ ஸலமா (ரலி) அவர்கள் - நான் கூறிய இந்த விஷயம், வழங்கிய சான்றானது பல்வேறு வரலாறுகளில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. ஸீரத் காத்தமுன்னபிய்யீனின் சில பகுதிகளும் இதில் இணைந்துள்ளன. எவ்வாறு இருப்பினும் - ஹஸ்ரத் அபூ ஸலமா (ரலி) அவர்களின் மரணம் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அபூ ஸலமா (ரலி) அவர்கள் இந்த போருக்காக பத்துக்கும் சற்று அதிகமான இரவுகள் மதீனாவிலிருந்து இருந்து வெளியே இருந்தார்கள். அவர்கள் மதீனாவுக்குத் திரும்பிய போது, உஹது போரில் அவர்களுக்கு ஏற்பட்டிருந்த காயம் மீண்டும் புத்துயிர் பெற்று விட்டது. அதனால் அவர்கள் நோய்வாய்ப்பட்டு விட்டார்கள். அதே ஆண்டு ஜமாதில் ஆகிர் மாதம் 3 -ம் நாள் மரணமடைந்து விட்டார்கள்.

துலைஹா பின் ஃஹுவைலத் எனும் பனூ அஸத் கோத்திரத்தின் எந்தத் தலைவரைப் பற்றி கூறப்பட்டிருந்ததோ அவர் மிகவும் வீரமான மனிதராக இருந்தார். அரபு நாட்டில் அவரை ஆயிரம் குதிரை வீரர்களுக்கு சமமாக கருதப்பட்டு வந்ததாக பிரசித்தி பெற்றிருந்தார். மேலும், இவர் மிகவும் அதிகமாக சொல்லாட்சி திறன் பெற்றிருந்தார். ஹிஜ்ரீ 9-ம் ஆண்டு பனூ அஸத் உடைய பிரதிநிதிக் குழுவுடன் சேர்ந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அவைக்கு வந்தார். இவர் இஸ்லாத்தை ஏற்றிருந்தார். ஆனால், பிறகு மார்க்கத்தை விட்டு சென்றுவிட்டிருந்தார். மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்நாளிலேயே பொய் நபித்துவ வாதியாக மாறி கூச்சல் குழப்பங்கள் ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைந்தார். கடைசியில் தோல்வியைத் தழுவி அரேபியாவில் இருந்து ஓடி விட்டிருந்தார்.

பிறகு, சிறிது காலம் கழித்து மதீனாவுக்கு வந்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கையில் பைஅத் செய்தார். மேலும் இறுதி மூச்சு வரை இஸ்லாத்தில் உறுதியாக நிலைத்திருந்து காட்டினார். காத்ஸியா போர் மற்றும் இதர பல இஸ்லாமிய போர்களில் பங்கு பெற்று தமது வீரத்தின் திறமையைக் காட்டினார். மேலும் ஹிஜ்ரீ 21-ம் ஆண்டு ஒரு போரில் ஷஹீது ஆகும் தரத்தைப் பெற்றார். எல்லாம் வல்ல அல்லாஹ் அவருடைய முடிவை நல்லதாக ஆக்க இருந்தான். எனவே இறுதியில் அவருக்கு நல்வாய்ப்பு கிடைத்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்.

பிறகு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உனைஸ் (ரலி) அவர்களின் போர்ப் படை பற்றிய குறிப்பு உள்ளது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உனைஸ் ஜுஹ்னீ (ரலி) அவர்கள் அன்ஸார் கோத்திரத்தார்களில் பனூ ஸலமாவின் நண்பராக இருந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உனைஸ் (ரலி) அவர்கள் சிரியாவில் ஹிஜ்ரீ 54-ம் ஆண்டு அல்லது சில அறிவிப்புகளுக்கு ஏற்ப ஹிஜ்ரீ 74-ம் ஆண்டு மரணமடைந்தார்கள். உஹது போரின் நிகழ்வுகள் மதீனாவின் அக்கம் பக்கத்து கோத்திரத்து மக்களுக்குத் தெரிய வந்த போது எவர்கள் எல்லாம் முஸ்லிம்களை வலுவிழந்தவர்களாகக் கருதி அவர்கள் மீது தாக்குதல் தொடுக்க திட்டம் வகுத்தார்களோ அவர்களில் பனூ லஹ்யான் கோத்திரத்தின் தலைவன் காலித் பின் ஸுஃப்யான் ஹுஸ்லீ

லஹ்யானீயும் இருந்தான்.

சில அறிவிப்புகளில் அவன் பெயர் ஸுஃப்யான் பின் காலித் என்று உள்ளது. எவ்வாறு இருப்பினும், அவன் முஸ்லிம்களுக்கு இப்பொழுதுதான் உஹது போரில் இழப்பு ஏற்பட்டுள்ளது; எனவே ஏன் அவர்களின் வலுவின்மையிலிருந்து பயனடைந்து அவர்கள் மீது தாக்குதல் தொடுக்கக் கூடாது; மதீனாவில் சூறையாடி அதில் நமது ஆதிக்கத்தை நிலைநாட்டக் கூடாது என்று நினைத்தான். அந்த மனிதனுடைய உள்ளத்தில் இஸ்லாத்தின் மீதான பகைமை மிகுதியாக நிறைந்திருந்தது. மிகவும் ஆணவம் கொண்டவனாக இருந்தான்.

இவன் நக்லா அல்லது ரிஃபாத் எனும் இடத்துக்கு அருகில் உர்னா எனும் பகுதியில் படையை ஆயத்தம் செய்து கொண்டிருந்தான். இவன் தனது சமுதாயத்தின் போர் வீரர்களையும் அக்கம் பக்கத்து மக்களையும் முஸ்லிம்களுக்கு எதிராக ஒன்று திரட்டுவதற்கான திட்டத்தை உருவாக்கி வைத்திருந்தான். பல்வேறு கோத்திரங்களைச் சேர்ந்த பல மக்கள் இவனிடம் ஒன்று கூடியும் இருந்தார்கள். ஸுஃப்யான் பின் காலித் மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்காக ஒரு படையைத் திரட்டியிருந்தான் என்பது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தெரிய வந்த போது, அன்னார் (ஸல்) தனித்துவம் வாய்ந்த, நுட்பமான, இந்தவொரு போர்த் தீர்மானத்தை எடுத்தார்கள்:

ஒரு படையை ஆயத்தம் செய்து, ஸுஃப்யானை எதிர்த்துப் போரிட அனுப்பி வைத்து, இரண்டு பக்கமும் இரத்தம் சிந்துவதற்கு பதிலாக நுட்பமான செயலால் அந்தக் கிளர்ச்சிப் படையை ஆயத்தம் செய்தவனையே துவக்கி வைத்தவனையே கொன்று விடுவது அதிகம் பொருத்தமாக இருக்கும்.

எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த பயங்கரமான அதே தருணத்தில் முக்கியமான நடவடிக்கைக்காக தம்முடைய வீரமிக்க ஒரு ஸஹாபி ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உனைஸ் (ரலி) அவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உனைஸ் (ரலி) அவர்களை அழைத்து அவர்களுக்கு ஸுஃப்யான் பின் காலிதின் சதித் திட்டத்தின் முழு விவரத்தையும் கூறினார்கள்.

மேலும் அமைதியாக சென்று அவனைக் கொன்று விடுவீராக! என்று கூறினார்கள். அப்துல்லாஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்)அவர்களே! எனக்கு அவனது தோற்றத்தின் அடையாளத்தைக் கூறுங்கள் என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார்கள். அன்னார் (ஸல்) நீர் அவனைப் பார்க்கும் போது உமக்கு திகில் ஏற்படும்; அவனைப் பார்த்த உடனேயே உமக்கு ஷைத்தான் நினைவுக்கு வந்து விடுவான் என்று கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே, நான் ஒருபோதும் யாரைக் கண்டும் அஞ்சியதில்லை என்று அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் பணிவுடன் கூறினார்கள். சரிதான்! ஆனால் அவனைப் பார்த்து நீர் அச்சமடைந்து விடுவீர் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

எனவே ஹிஜ்ரீ 4-ம் ஆண்டு முஹர்ரம் 5-ம் நாள் இவர்கள் தனியாகவே இந்தத் துணிச்சலான பணிக்காக புறப்பட்டு விட்டார்கள். அப்துல்லாஹ் கூறுகின்றார்கள்: நான் உர்னா எனும் இடத்தை அடைந்த போது - அது அரஃபாத்துக்கு அருகில் உள்ள ஓர் ஊராகும் - நான் ஸுஃப்யானை கைத்தடியைத் தாங்கி நடக்கக் கண்டேன். மேலும், அவனுக்கு பின்னாலேயே பல்வேறு கோத்திரங்களில் இருந்து அவனோடு வந்து இணைந்து கொண்டவர்கள் இருந்தார்கள்.

இவன் வயது முதிர்வு காரணமாக தடி தாங்கி நடக்கவில்லை. மாறாக, கையில் கைத்தடி வைத்திருப்பது அக்காலத்து வழக்கமாக இருந்து வந்தது.

எவ்வாறு இருப்பினும், அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கூறிவந்தார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னிடம் அவனைப் பற்றி என்ன கூறினார்களோ? அதை வைத்து நான் அவனை உடனடியாக அடையாளம் கண்டு கொண்டேன். ஏனெனில், அவனைப் பார்த்த உடனேயே எனக்கு திகில் ஏற்பட்டது. ஆனால், நானோ ஒருபோதும் யாரைக் கண்டும் அஞ்சியதில்லை. எனவே நான் உள்ளத்தில் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் உண்மையைக் கூறினார்கள் என்று கூறினேன். அப்பொழுது அஸர் தொழுகைக்கான நேரமாக இருந்தது. எனவே இப்பொழுது நான் அவனை எதிர் கொண்டால் எனது அஸர் தொழுகை விடுபட்டு விடப்போகிறது என்று நான் அஞ்சினேன். எனவே நான் அவன் பக்கம் சென்றவாறே தொழுகையை நிறைவேற்றி விட்டேன். உடனுக்குடன் எனது தலையால் சைகையும் செய்து வந்தேன்.

நான் அவனிடம் சென்றபோது, அவன் நீ யார் ? என்று கேட்டான். நான் குஸாஆ கோத்திரத்தைச் சேர்ந்தவன் ஆவேன்; நீ முஹம்மது (ஸல்) அவர்களுக்கு எதிராக படையைத் திரட்டுவதாக நான் கேள்விப்பட்டேன்; எனவே நானும் உன்னுடன் இணைந்து கொள்வதற்காக வந்தேன் என்று நான் கூறினேன். அதற்கு அவன், நான் முஹம்மதை (ஸல்) எதிர் கொள்வதற்காக படையைத் திரட்டுகிறேன் என்று கூறினான். எனவே நான் சிறிது நேரம் வரை அவனோடு நடந்து கொண்டிருந்தேன். பிறகு நான் அவனிடம் பேச ஆரம்பித்தேன். அவன் என்னுடைய உரையாடலில் பெரும் ஆர்வம் கொண்டான். உண்மையில் முஹம்மதுக்கு (ஸல்) இதுவரை என்னைப் போன்ற ஒருவன் கிடைக்கவில்லை; இதுவரை போர் திறமை பெறாத மக்களே கிடைத்திருக்கின்றார்கள் என்று ஸுஃப்யான் பின் காலித் கூறினான்.

கடைசியில் அவன் தனது கூடாரத்தை சென்றடைந்து அவனுடன் இருந்தவர்கள் இங்கும், அங்கும் சென்று விட்ட பிறகு அவன் என்னிடம், குஸாஃ சகோதரனே! சற்று இங்கே வா. என்று கூறினான். நான் அவனுக்கு அருகில் சென்றதும் அவன் உட்கார்! என்றான். நான் அவனுக்கு அருகிலேயே அமர்ந்து கொண்டேன். எதுவரை என்றால் எல்லாப் பக்கமும் இரவின் நிசப்தம் நிலவியதும் மக்கள் உறங்கியதும் நான் திடீரென்று எழுந்து அவனைக் கொன்று அவன் தலையை எடுத்துக் கொண்டேன். நான் அங்கிருந்து புறப்பட்டு அருகில் இருந்த ஒரு மலைக் குகையில் சென்று ஒளிந்து கொண்டேன்.

சில மக்கள் தேடியவாறு அந்தக் குகை வரை வந்தார்கள்தான்; ஆனால், அவர்களுக்கு எதுவும் கிடைக்காததால் அவர்கள் நம்பிக்கை இழந்து அங்கிருந்து திரும்பிச் சென்று விட்டார்கள். இதற்குப் பிறகு, நான் குகையில் இருந்து வெளியேறி புறப்பட்டேன். நான் இரவில் பயணம் செய்வேன். பகலில் எங்காவது ஒளிந்து கொள்வேன். கடைசியில் மதீனாவை சென்றடைந்ததும் என்னைப் பார்த்ததுமே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இயல்பாகவே

أَفْلَحَ الْوَجْهُ

என்று கூறினார்கள்.

பொருள்: இந்த முகம் வெற்றிகரமானதாக இருந்தது.

அதற்கு, இவர்கள் மிகவும் பணிவுடனும் புத்திசாலித்தனத்துடனும் இந்த ஒரு வாக்கியத்தை கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் பணிவுடன் உடனடியாக இவ்வாறு கூறினார்கள்:

أَفْلَحَ وَجْهُكَ يَا رَسُولَ اللهِ

அதாவது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்களது முகம் வெற்றிகரமானதாக இருந்தது. அதாவது இந்த வெற்றி அனைத்தும் தங்களுடையதே ஆகும். தங்களுடைய துஆக்களின் பரக்கத்தாலேயே ஆகும். இதற்குப் பிறகு, ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் முழு விவரத்தையும் கூறினார்கள். மேலும் அந்தக் கிளர்ச்சியாள தலைவனின் தலையை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன்னால் வைத்து விட்டார்கள்.

இவ்வாறும் ஓர் அறிவிப்பு வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உனைஸ் (ரலி) அவர்கள் வருவதற்கு முன்பே ஸுஃப்யான் பின் காலித் கொல்லப்பட்ட செய்தியைத் தெரிவித்து விட்டிருந்தார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இந்த வெற்றியினால் அன்னார் (ஸல்) மகிழ்ச்சியடைந்து எனக்கு ஒரு கைத்தடியை வழங்கினார்கள். மேலும் இது எனக்கும், உமக்கும் இடையில் சொர்க்கத்தில் அடையாளமாக இருக்கும். நீர் சொர்க்கத்தில் இது தாங்கலாக இருந்து கொள்வீர்! என்று கூறினார்கள். ஆக, இந்தத் தடி எப்பொழுதும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உனைஸ் (ரலி) அவர்களிடம் இருந்தது.

எதுவரை என்றால், அவர்களுடைய இறுதி நேரம் வந்த போது அவர்கள் தம் வீட்டாருக்கு அது தொடர்பாக வலியுறுத்தியவாறு இவ்வாறு கூறினார்கள்: இந்தத் தடியை எனது கஃபனுக்குள் இது எனது உடலுக்கும், கஃபனுக்கும் நடுவில் இருக்கும் வண்ணம் வைக்க வேண்டும்.

எனவே வீட்டு மக்கள் அந்த உயிலை நிறைவேற்றினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உனைஸ் (ரலி) அவர்களை ஸுல் மிஃஹ்ஸரா என்றும், அதாவது கைத்தடி உடையவர் என்றும் கூறுவார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உனைஸ் (ரலி) அவர்கள் மதீனாவிலிருந்து 18 நாட்கள் வெளியில் இருந்தார்கள். சனிக்கிழமை அன்று முஹர்ரமுக்கு 7 நாட்கள் மீதமிருக்கும் போது திரும்பி வந்தார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஹிஜ்ரீ 4-ம் ஆண்டு முஹர்ரம் மாதத்தில் இந்தப் போர் நடந்ததாக

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

இதன் விவரத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

குறைஷியர்களின் ஆத்திரமூட்டல் மற்றும் உஹது போரில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட தற்காலிக தோல்வி இப்பொழுது மிகவும் வேகத்துடன் தனது பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. எனவே பனூ அஸத் மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு ஆயத்தம் மேற்கொண்டிருந்த அதே நாட்களில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு பனூ லஹ்யான் கோத்திரத்தின் மக்கள் தங்களுடைய தலைவன் ஸுஃப்யான் பின் காலிதின் தூண்டுதலினால் மக்காவுக்கு அருகில் இருந்த ஓர் இடமான தங்களது ஊர் உர்னாவில் மிகப் பெரும் படையைத் திரட்டுகிறார்கள் என்றும், மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதுதான் அவர்களுடைய எண்ணம் என்றும் தகவல் கிடைத்தது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மிகவும் அதிகமாக சந்தர்ப்பம் அறிந்தவர்களாகவும், அரேபியாவின் பல்வேறு கோத்திரங்களின் நிலைமை மற்றும் அந்தத் தலைவர்களின் ஆற்றல் மற்றும் செல்வாக்கு பற்றி மிக நன்றாக அறிந்து வைத்தவர்களாகவும் இருந்தார்கள். அன்னார் (ஸல்) இந்த செய்தி கிடைத்த உடனேயே இந்த அனைத்து தீங்கிழைத்தலும், குழப்பம் விளைவித்தலும் பனூ லஹ்யான் உடைய தலைவன் ஸுஃப்யான் பின் காலித் உடையதாகும் என்பதையும், அவன் நடுவில் இல்லாமல் போனால் பனூ லஹ்யான் மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு துணிச்சல் கொள்ள முடியாது என்பதையும் புரிந்து கொண்டார்கள்.

மேலும் ஸுஃப்யானைத் தவிர அந்தக் கோத்திரத்தில தற்பொழுது இது போன்ற திட்டத்திற்கு தலைவன் ஆகக் கூடிய செல்வாக்கு பெற்ற மனிதன் யாருமில்லை என்பதையும் அன்னார் (ஸல்) அறிந்திருந்தார்கள். எனவே பனூ லஹ்யானுக்கு எதிராக ஏதாவது ஒரு படைக் குழு அனுப்பப்பட்டால் ஏழை முஸ்லிம்களுக்கு அது துன்பத்துக்குக் காரணமாக அமைவது மட்டுமின்றி இந்த வழிமுறை நாட்டில் அதிகம் இரத்தம் சிந்துவதற்கான கதவைத் திறந்து விடுவதற்கான சாத்தியமுள்ளது என்று ஹுஸூர் (ஸல்) அவர்கள் கருதினார்கள்.

எனவே யாராவது ஒருவர் செல்ல வேண்டும்; மேலும் சந்தர்ப்பம் பார்த்து இந்தக் குழப்பத்தைத் தோற்றுவித்தவனான இந்தத் தீங்கின் வேரான ஸுஃப்யான் பின் காலிதைக் கொன்று விட வேண்டும் என்ற திட்டத்தை அன்னார் (ஸல்) வகுத்தார்கள். எனவே அன்னார் (ஸல்) இந்த நோக்கத்திற்காக ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உனைஸ் (ரலி) அவர்களை அனுப்பி வைத்தார்கள். அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் ஒருபோதும் ஸுஃப்யானைக் கண்டதில்லை என்பதனால் அன்னார் (ஸல்) தாமே அவருக்கு ஸுஃப்யானின் புறத் தோற்றம் முழுவதையும் புரிய வைத்து விட்டார்கள். மேலும் இறுதியில் கூறினார்கள்:

எச்சரிக்கையாக இருப்பீராக ஸுஃப்யான் ஷைத்தானின் ஒரு மொத்த உருவமாவான். எனவே ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உனைஸ் (ரலி) அவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் பனூ லஹ்யானின் முகாமை சென்றடைந்தார்கள். அந்த மக்கள் உண்மையிலேயே மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கான ஆயத்தத்தில் மிகவும் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள். மேலும், இரவு நேரத்தில் சந்தர்ப்பம் பார்த்து ஸுஃப்யானுக்கு முடிவு கட்டி விட்டார்கள்.

பனூ லஹ்யானுக்கு இது தெரிய வந்தபோது, அவர்கள் அப்துல்லாஹ் (ரலி) அவர்களைப் பின் தொடர்ந்தார்கள். ஆனால் அவர்கள் ஒளிந்து, மறைந்து தப்பி ஓடி வந்துவிட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன்னால் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உனைஸ் (ரலி) அவர்கள் வந்தபோது அன்னார் (ஸல்) அவரது முகத்தைப் பார்த்தே வெற்றி பெற்று வந்துள்ளார்கள் என்பதை அடையாளம் கண்டு கொண்டார்கள். எனவே அன்னார் (ஸல்) அவரைப் பார்த்த உடனேயே

اَفْلَحَ الْوَجْهُ

.என்று கூறினார்கள்.

அதாவது, இந்த முகமோ வெற்றி பெற்றதாகத் தென்படுகிறது.

அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் பணிவுடன் கூறினார்கள். மேலும், பணிவுடன் என்னே அருமையாக கூறினார்கள். பாருங்கள்!

اَفْلَحَ وَجْهُكَ يَارَسُوْلَ الله

அதாவது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எல்லா வெற்றிகளும் தங்களுடையவையே ஆகும். அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம்முடைய கைத் தடியை அப்துல்லாஹ் (ரலி) அவர்களுக்குப் பரிசாக வழங்கினார்கள். மேலும், இந்தத் தடி உமக்கு சொர்க்கத்தில் கைதாங்கிக் கொள்ள உதவும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் இந்தத் தடியை மிகவும் அன்போடும், களங்கமற்றத் தன்மையோடும் தம்மிடம் வைத்திருந்தார்கள். மரணிக்கும் போது, அதை அவர்களுடனேயே புதைத்து விட வேண்டும் என்று வலியுறுத்திக் கூறினார்கள். இவ்வாறே செய்யப்பட்டது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸுஃப்யான் பின் காலிதின் குழப்பம் ஏற்படுத்துதலை மிகவும் பயங்கரமானதாகக் கருதி வந்தார்கள் என்பதும், அவனைக் கொல்வதை பொது அமைதி ஏற்படுத்துவதற்கு ஒரு கருணையின் காரணியாகக் கருதி வந்தார்கள் என்பதும், அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் வெற்றி பெற்று திரும்பிய போது, அன்னார் (ஸல்) வெளிப்படுத்திய அந்த மகிழ்ச்சி மற்றும் அவர்களுக்கு அசாதாரணமான முறையில் வழங்கிய பரிசு ஆகியவற்றிலிருந்து தெரிகின்றது.

இஸ்லாத்தின் பகைவர்கள், எதிரிகள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அமைதியை சீர்குலைத்தார்கள் என்றும் மனித உயிர்களைக் கொல்லச் செய்தார்கள் என்றும் அன்னார் (ஸல்) மீது பழிசுமத்துகிறார்கள். நவூதுபில்லாஹ்!

அன்னார் (ஸல்) மனித உயிர்களைக் கருத்தில் கொண்டதன் நிலையோ இதுவாகும். அதாவது எதிரி கோத்திரங்களின் மக்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காக அவர்களின் மற்ற மக்கள் தப்பித்துக் கொள்ளும் பொருட்டு ஓர் உயிரைக் கொல்வது சிறந்ததாகும் என்ற சாதுர்யமான செயலை மேற்கொண்டார்கள்.

இது மனித அனுதாபத்தின் உச்சகட்டம் ஆகும். இன்றைய காலத்தின் பெயர் தாங்கி உலகத்தினரோ சில மக்களைக் கொலை செய்வதற்காக சாக்கு போக்காகக் கூறிக் கொண்டு அப்பாவி குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியவர்களைக் கொலை செய்கின்றார்கள். மேலும் இதுவோ போரில் நடக்கத்தான் செய்யும் என்று கூறுகிறார்கள். அதுவும் மிகவும் துணிச்சலுடன் கூறுகின்றார்கள்.

நேரடியாக போரில் ஈடுபட்டிருக்காத எந்த ஒரு குழந்தையையும், ,முதியவரையும், பெண்களையும், மதரீதியிலான எந்த நபரையும் கொல்லக் கூடாது என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களோ முறையாக போரிலும் கட்டளை பிறப்பித்து வந்தார்கள்.

ஆக இதுதான் முஹம்மத் (ஸல்) அவர்கள் மற்றும் இஸ்லாமிய போதனையின் அழகிய முன்மாதிரியாகும்.

இப்பொழுது ரஜீஹ் போர் பற்றி கூறுவேன். அதன் விவரம் நீளமானது என்பதால் இன்று சில பகுதியை எடுத்து வைப்பேன். இந்தப் போர் அதன் அமீர் மர்ஸத் பின் அபீ மர்ஸதின் காரணத்தினால் மர்ஸத் பின் அபீ மர்ஸத் போர் என்றும் அழைக்கப்படுகிறது. ஆனால், ரஜீஹ் என்ற பெயரே அதிகம் பிரசித்தி பெற்றது.

ரஜீஹ் என்பது பனூ ஹுஸைல் உடைய ஒரு நீரூற்றாக இருந்தது. அது ஹஜ்ஜாஸில் உள்ளது. அதன் தற்போதைய பெயர் பத்தீஆ ஆகும். அது கண்ணியத்திற்குரிய மக்காவிலிருந்து 70 கீ.மீ பயண தொலைவில் தெற்கில் அமைந்துள்ளது. இந்தப் போர் ஹிஜ்ரீ 4-ம் ஆண்டு ஸஃபர் மாதம் ரஜீஹ் பக்கம் முன்வந்தது. இப்னு இஸ்ஹாக் மற்றும் இப்னு ஹிஷ்ஷாம் ஆகியோரின் கருத்துப்படி இந்தப் போர் உஹது போருக்குப் பிறகு மூன்றாவது ஆண்டில் நடைபெற்றது.புகாரீயின் விளக்கவுரையான ஃபத்ஹுல் பாரீ மற்றும் மவாஹிப் ஆகியவற்றில் மூன்றாம் ஆண்டின் இறுதியில் இது நடந்தது என்று எழுதப்பட்டுள்ளது.

நம்முடைய ஆராய்ச்சி குழுவினர் ரஜீஹ் போர் தொடர்பாக ஒரு குறிப்பைக் கொடுத்துள்ளார்கள். அது இது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியதாகும். அதாவது இதில் சில தேதிகள் மாறுபடுகின்றன. எவ்வாறு இருப்பினும், ஆய்வு செய்யக் கூடிய மக்களுக்குப் பலனளிக்கலாம்; எனவே நான் இதையும் வாசித்து விடுகின்றேன்;

வரலாறு மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்களில்; எதுவரை என்றால் புகாரீயிலும் ரஜீஹ் போர் மற்றும் பிஃரே மஊனா நிகழ்வுகள் ஒன்றுடன் ஒன்று கலந்து விட்டன. வாழ்க்கை வரலாற்றின் ஆசிரியர்கள் சிலர் இதன் பக்கம் கவனமூட்டியும் உள்ளார்கள். அதில் இந்தவொரு பிழையும் ஏற்பட்டுள்ளது. அதாவது பெரும்பாலான வாழ்க்கை வரலாற்றின் ஆசிரியர்கள் ரஜீஹ் போரின் தேதியை ஹிஜ்ரீ 4-ம் ஆண்டு ஸஃபர் மாதம் என்று எழுதுகிறார்கள். மேலும் அதன் விவரம் இவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது:

ஹஸ்ரத் ஃஹுபைப் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸைத் (ரலி) ஆகிய இருவரையும் மக்காவில் விற்கப்பட்டு விட்டது. ஆனால், கண்ணியத்திற்குரிய மாதங்கள் துவங்கி விட்டதனால் மக்கத்தினர் அவர்களை சிறைவாசத்தில் வைத்திருந்தார்கள். கண்ணியத்திற்குரிய மாதங்கள் முடிவடைந்தவுடன் அவர்கள் இருவரையும் கொன்று விட்டார்கள்.

இதை பெரும்பாலான வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்கள் எடுத்துரைக்கின்றார்கள். ஆனால், கவனம் செலுத்தும் போது என்ன கேள்வி எழுகிறது

என்றால், கண்ணியத்திற்குரிய மாதங்கள் நான்கு ஆகும். மூன்று தொடர்ச்சியாக உள்ளன. அதாவது துல் கஅதா, துல் ஹஜ்ஜா மற்றும் முஹர்ரம், நான்காவது மாதமோ முஹர்ரமுக்கு ஐந்து மாதங்கள் கழித்து (வரும்) ரஜப் மாதம் ஆகும்.

இப்பொழுது இந்தப் போர் ஸஃபர் மாதம் நடைபெற்றது என்றால் கண்ணியத்திற்குரிய மூன்று மாதங்களோ முன்னரே கடந்து விட்டிருந்தன.இப்பொழுது ஸஃபர் மாதத்திற்கு நான்கு மாதங்கள் கழித்து கண்ணியத்திற்குரிய நான்காவது மாதம் வரவிருந்தது. எனவே இந்தப் போரை ஹிஜ்ரீ 4-ம் ஆண்டு ஸஃபர் மாதத்தில் நடைபெற்றதாக ஏற்றுக் கொண்டால் பிறகு கண்ணியத்திற்குரிய மாதங்கள் துவங்கி விட்டிருந்தன என்று கூறுவது அறிவுக்குப் புறம்பானதாகும். பிறகு, அதே போன்று கண்ணியத்திற்குரிய மாதங்கள் இடையே இல்லாத போது, இவர்கள் இருவரையும் நீண்ட காலம் சிறையில் வைப்பதற்கு எந்த நியாயமான காரணமும் இல்லை. இவர்களை மிக விரைவில் கொன்று தமது பழிவாங்கும் நெருப்பைத் தணித்துக் கொள்ள விரும்பிய மக்கத்தினருக்கு தேவையில்லாமல் இவர்களை நீண்ட காலம் சிறைபிடித்து வைத்து, உணவு மற்றும் பாதுகாப்பு பொறுப்புக்கான சுமையைத் தம் தலை மீது எடுத்துக் கொள்ளும் அவசியம் என்ன வந்தது?

எந்த வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்கள் மற்றும் வரலாற்றாசிரியர்கள் இதை ஹிஜ்ரீ 4-ம் ஆண்டு ஸஃபர் மாதம் நடைபெற்றதாக எடுத்துரைக்கிறார்களோ அவர்கள் இந்தக் கேள்விகளை எழுப்பவில்லை. நம்முன் இரண்டு வழிகளில் ஒரு வழி இருக்கின்றது. ஒன்று, கண்ணியத்திற்குரிய மாதங்கள் என்ற விஷயமும், அவர்கள் இருவரும் ஒரு நீண்ட காலம் வரை சிறையில் இருந்த விஷயமும் சரியானதல்ல என்று கூற வேண்டும்.

அல்லது நாம் இவ்வாறு கூற வேண்டும்: அறிவிப்புகள் அனைத்துமே சரியானவைதான்; கண்ணியத்திற்குரிய மாதங்களும் துவங்கிவிட்டிருந்தன. ஒரு நீண்ட காலம் வரை சிறைபிடிக்கப்பட்டும் இருந்தார்கள்.ஆனால் இந்த நிலையில் பெரும்பாலான வரலாற்றாசிரியர்கள் மற்றும் வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்களுக்கு இந்தப் போரின் தேதியைப் பாதுகாத்து வைப்பதில் பிழை ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டி வரும். மேலும் குறைவாக உள்ள அந்த வரலாற்றாசிரியர்களின் கூற்று முன்னுரிமை வழங்கத் தக்கதாகும். அவர்கள் இதைக் கூறுகின்றார்கள்:

அவர்கள் மக்காவில் விற்கப்பட்ட போது, அப்பொழுது கண்ணியத்திற்குரிய மாதம் அதாவது துல்கஅதா துவங்கிவிட்டிருந்தது. எனவே வாழ்க்கை வரலாற்றின் முதன்மையான நூல்களில் ஒன்றான ஸீரத் இப்னு இஸ்ஹாக் மற்றும் இப்னு ஹிஷ்ஷாம் ஆகிய இரண்டும் ரஜீஹ் போரின் தேதியை எடுத்துரைத்தவாறு இவ்வாறு எழுதியுள்ளன:

இந்தப் போர் உஹது போருக்குப் பிறகு ஹிஜ்ரீ 3-ம் ஆண்டு நடைபெற்றது. மேலும் புகாரீயின் ஒரு பிரசித்திப் பெற்ற மற்றும் சான்று பெற்ற விளக்கவுரை அளிப்பவர் இப்னு ஹஜர் ஃபத்ஹுல் பாரீயில் இது தொடர்பாக இதைக் கூறுகிறார்கள்:

இந்த நிகழ்வு ஹிஜ்ரீ 3-ம் ஆண்டின் இறுதியில் நடைபெற்றது. மேலும், இது தொடர்பாக வாழ்க்கை வரலாற்றின் மற்றொரு சான்று மிக்க நூல் மவாஹிபு லித்துன்யாவும் இதை எழுதியுள்ளது. எனவே இந்தப் போர் ஹிஜ்ரீ 3-ம் ஆண்டு ஷவ்வாலின் கடைசி நாள்களில் நடந்தது என்பதே அதிகம் சரியாகத் தெரிகிறது.

ஹிஜ்ரீ 4-ம் ஆண்டு ஸஃபர் மாதத்தில் ஹஸ்ரத் ஃகுபைப் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸைத் (ரலி) ஆகியோர் ஷஹீது ஆக்கப்பட்டார்கள். அவர்களது ஷஹாதத் செய்தி மதீனாவை எட்டிய போது அறிவிப்புகளில் இந்தத் தேதி மெதுமெதுவாக அதிகம் மேலோங்கி விட்டது. எவ்வாறு இருப்பினும் அல்லாஹ்வே நன்கறிவான்.

இந்தப் போரின் பின்னணி இதுவாகும். இது பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: முந்தைய போர், அதாவது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உனைஸின் போரில் கூறப்பட்டிருந்தது, பனூ லஹ்யானுடைய தலைவன் ஸுஃப்யான் பின் காலித் கொல்லப்பட்டான். அதனால் இந்தக் கோத்திரம் பழிவாங்கும் நெருப்பில் எரிந்து கொண்டிருந்தது.

முஸ்லிம்களை இதற்காக பழிவாங்க இயல என்ன வழிமுறை இருக்கும்? என்ற சிந்தனையிலேயே இரவு பகலாக மூழ்கியிருக்கலானார்கள். எனவே இந்தக் கோத்திரத்தின் சில மக்கள் அஸ்ல் மற்றும் காரா கோத்திரத்திடம் வந்தார்கள். இந்த மக்கள் அம்பு எறிவதில் மிகவும் திறமைபடைத்தவர்களாக இருந்தார்கள். அஸ்ல் கோத்திரம் பனூ ஹோன் பின் ஃகுஸைமாவின் ஒரு கிளைக் கோத்திரமாக இருந்தது. அது அஸ்ல் பின் தேஷைச் சேர்ந்ததாக இருந்தது. காரா கோத்திரமும் ஹோன் உடைய ஒரு கிளைக் கோத்திரமாக இருந்தது. அது தேஷைச் சேர்ந்ததாக இருந்தது.

பனூ லஹ்யான் கோத்திரம் அவர்களிடம் கூறியது; நீங்கள் எல்லாம் மதீனாவுக்கு முஹம்மத் (ஸல்) அவர்களிடம் செல்லுங்கள்; அவர்களிடம் அவர்கள் உங்களுடைய கோத்திரத்தில் இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுத்தல் மற்றும் தப்லீஃக் பணியை செய்வதற்காக தம்முடைய சில மக்களை உங்களுடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளுங்கள்.

முஹம்மது (ஸல்) அவர்கள் தம்முடைய சில தோழர்களை உங்களுடன் அனுப்பி வைத்து விடுவார்கள் என்ற முழு நம்பிக்கை இருக்கிறது. முஹம்மது (ஸல்) அவர்களின் தோழர்கள் உங்களுடன் வரும்போது நாங்கள் அவர்களை மக்காவின் குறைஷியர்களின் கையில் விற்று விடுவோம். அதற்குப் பகரமாக நமக்கு மாபெரும் தொகை கிடைத்து விடும். மக்கத்தினர் அவர்களைக் கொன்று விடுவார்கள். அதனால் நம்முடைய பழிவாங்குதலும் நிறைவேறி விடும். மேலும் அந்தப் பொருட் செல்வத்திலிருந்து உங்களுக்கும் நாங்கள் ஒரு பகுதியை வழங்குவோம். எனவே இந்த முறையான திட்டம் வகுத்தலுடன் அஸ்ல் மற்றும் காரா கோத்திரத்தின் ஏழு நபர்கள் ஒரு பிரதிநிதிக் குழுவின் வடிவில் மதீனாவுக்கு வந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேலான சபையில் இவ்வாறு கூறலானார்கள்:

எங்களுடைய கோத்திரத்தில் இஸ்லாம் பெரிதும் பிரசித்தி பெற்றுள்ளது. எனவே அங்கு இஸ்லாத்தின் பால் அழைக்கும் பணியை மேற்கொள்வதற்காக தாங்கள் தங்களுடைய சில மக்களை எங்களுடன் அனுப்பி வையுங்கள்.

இதற்கிடையிலேயே கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் மக்காவின் அக்கம் பக்கம் உளவு பார்த்தவாறு முழு நிலைமைகளையும் ஆய்வு செய்வதற்காக பத்து பேர் கொண்ட ஓர் அணியை ஆயத்தம் செய்து வைத்திருந்தார்கள். இப்பொழுது இந்தப் படை வந்த போது கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் பத்து பேர் கொண்ட அந்தக் குழுவையே அவர்களுடன் அனுப்பி வைத்து விட்டார்கள்.

ஓர் அறிவிப்புக்கு ஏற்ப ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களுடன் ஏழு பேரை அனுப்பினார்கள். இப்னு ஹிஷ்ஷாம் அன்னார் ஆறு ஸஹாபிகளை அவர்களுடன் அனுப்பி வைத்தார்கள் என்று எழுதியுள்ளார்கள். ஆனால் அவர்கள் பத்து பேர் இருந்தார்கள் என்று இப்னு ஸஃது (ரலி) அவர்களோ எடுத்துக் கூறியுள்ளார்கள். மேலும், அவர்களில் ஏழு பேரின் பெயரைக் கூறியுள்ளார்கள். ஸஹீஹ் புகாரியில் பத்து பேர் என்று கூறப்பட்டுள்ளது. வாழ்க்கை வரலாற்றின் பெரும்பாலான நூல்களிலும் பத்து ஸஹாபா என்று கூறப்பட்டுள்ளது. ஆயினும், ஏழு ஸஹாபிகளின் பெயர்களே கிடைக்கின்றன.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அஹ்ஸன் பின் ஸாபித் (ரலி) அவர்களை அமீராக நியமித்தார்கள். சிலர் மர்ஸத் பின் அபீ மர்ஸத் ஃகன்வீயை அமீராக நியமித்ததாக கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹிஜ்ரத்தின் நான்காம் ஆண்டு அஸ்ல் மற்றும் காரா எனும் அரேபியாவின் இரண்டு கோத்திரங்கள் தம்முடைய பிரதிநிதிகளை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அனுப்பி எங்களுடைய கோத்திரத்தில் பல மக்கள் இஸ்லாத்தின் பக்கம் ஈர்க்கப்பட்டுள்ளார்கள் என்று பணிவுடன் கூறினார்கள். மேலும் அவர்கள் மத்தியில் வாழ்ந்து அவர்களுக்கு இந்தப் புதிய மார்க்கத்தின் போதனையை வழங்கிட இஸ்லாமிய போதனைகளை முழுமையாக அறிந்த சில மக்களை அனுப்பி வையுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தனர்.

உண்மையில் இது ஒரு சதித் திட்டமாக இருந்தது. இதை இஸ்லாத்தின் உறுதியான எதிரி பனூ லஹ்யான் கோத்திரம் செய்தது, இந்தப் பிரதிநிதிகள் முஸ்லிம்களை அழைத்து வரும் போது அதாவது அவர்கள் அனுப்பியிருந்த இந்தப் பிரதிநிதிகள் முஸ்லிம்களை அழைத்து வரும்போது அவர்கள் அவர்களைக் கொன்று தங்களுடைய தலைவன் ஸுஃப்யான் பின் காலிதுக்காக பழிவாங்கலாம் என்பது அவர்களின் நோக்கமாக இருந்தது.

எனவே அவர்கள் அஸ்ல் மற்றும் காரா கோத்திரத்தின் பிரதிநிதிகளை அவர்கள் தம்முடன் சில முஸ்லிம்களை அழைத்து வர வேண்டும் என்ற நோக்கத்திற்காக

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

பரிசுகளுக்கான பெரும் பெரும் வாக்குறுதிகளை அளித்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். அஸ்ல் மற்றும் காரா மக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அடைந்து வேண்டுகோள் விடுத்த போது அன்னார் (ஸல்) அவர்களுடைய பேச்சில் நம்பிக்கை வைத்து அவர்களுக்கு இஸ்லாத்தின் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் பற்றிய போதனையை வழங்குவதற்காக பத்து முஸ்லிம்களை அவர்களுடன் அனுப்பி வைத்து விட்டார்கள்.

ஆகவே இந்த மக்கள் சென்றார்கள். பிறகு, அடுத்து உள்ள நிகழ்வுகளை இனி எடுத்துரைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

இன்று நான் மீண்டும் ஏமன் நாட்டின் இறைவழியில் சிறை சென்றவர்களுக்காக குறிப்பாக துஆவுக்காக கூற விரும்புகிறேன்.குறிப்பாக, அங்கு லஜ்னா தலைவியாக இருக்கும் அந்தப் பெண்மணிக்காகவும் (துஆ செய்யுங்கள்). இவரை மிகவும் சிரமத்தில் வைத்துள்ளார்கள்; சிறைவாசத்தில் வைத்துள்ளார்கள். மேலும் அவர்களுடைய பேச்சைக் கேட்க ஆயத்தமாக இல்லாத இன்னும் சில நபர்களையும் கைதிகளாக ஆக்கி வைத்துள்ளனர். அவர்களுக்காக குறிப்பாக துஆ செய்யுங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்கள் விடுதலை ஆவதற்கான ஏற்பாட்டை செய்தருள்வானாக. பாகிஸ்தானில் இறைவழியில் சிறை சென்றவர்களின் விடுதலைக்காகவும் துஆ செய்யுங்கள்.

பாலஸ்தீனத்து மக்களுக்காகவும் துஆ செய்து கொண்டே இருங்கள். அவர்களுடைய நிலைமையும் சீரடைவதாகத் தெரிந்து மீண்டும் சீர்கெட்டு விடுகின்றது. இஸ்ரேல் அரசு ஆணவத்துடன் செயல்படுகிறது. எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்களுக்கு அவர்களது அநீதிகளிலிருந்து விரைவில் விடுதலையை வழங்குவானாக. முஸ்லிம்களுக்கும் தங்களுடைய உரிமையை நிறைவேற்றுவதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக.

தமிழாக்கம்

மவ்லவி அதாவுல் முஃக்னீ

* * * * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த ***TOLL FREE*** எண்ணில்

ஃபோன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)




**1ம் பக்கத் தொடர்ச்சி......(தஃப்ஸீரே கபீர்)**

அல்லாஹ்வின் திருப்திக்காக தனது வாழ்வை அர்ப்பணிக்கக் கூடியவர்களும், முழுமையான ஏகத்துவத்தில் நிலைநிற்கக் கூடிய மக்களும் அவற்றிலிருந்து பயன் பெற வேண்டும் என்பதற்காக மஸ்ஜித்கள் கட்டப்படுகின்றன.

பயணி பள்ளிவாசலிலிருந்து இந்த வடிவில் பயன் பெறுகின்றனர். அதாவது அவருக்கு வேறு எங்கும் தங்குமிடம் கிடைக்கவில்லை என்றால் பின்னர் அவர் சில நாட்கள் அதில் தங்கி இன்னல்களிலிருந்து தப்பித்துக் கொள்கின்றார். மேலும், பள்ளிவாசலோ கூச்சல் குழப்பங்களிலிருந்து பாதுகாக்கப்பட்ட இடமாக இருப்பதனால் அவர் அதில் அமர்ந்து மனநிறைவுடனும், நிம்மதியாகவும் துஆக்கள் செய்ய முடியும். மேலும் தனது இறைவனிடத்தில் வேண்டுதல்களை முன்வைக்க முடியும். இவ்வாறு அதில் தங்குபவர் பயனடைகின்றார். மேலும், தங்களை மார்க்கத்திற்காக அர்ப்பணித்துக் கொண்ட மக்கள் இருக்கின்றனர். அவர்களின் அசல் தங்குமிடம் மஸ்ஜிதாகவே இருக்கின்றது. ஏனெனில், மஸ்ஜித் நம்பிக்கையாளர்கள் ஒன்றுகூடுவதற்கான இடமாக இருக்கின்றது. மேலும், அது போன்ற இடத்திலிருந்து உண்மையான நேசமும், தொடர்பும் கொண்ட ஒரு மனிதனால் பிரிந்து இருக்கவே முடியாது. ஆயினும், இந்த விஷயத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும்; அதாவது, சமுதாய நலனிற்காக அமைகின்ற அந்த அனைத்துப் பணிகளும் இறைவனை நினைவுகூர்வதற்கான பணியின் மற்றோர் வடிவமாக இருக்கின்றன. அது நீதித்துறையை சார்ந்ததாக இருந்தாலும் சரி அல்லது சண்டைகள் மற்றும் குழப்பங்கள் தொடர்பானவையாக இருந்தாலும் சரி; அல்லது கல்வி தொடர்பானதாக இருந்தாலும் சரி; அல்லது வேறு ஏதாவது வடிவில் முஸ்லிம்களின் முன்னேற்றம் மற்றும் அவர்களுடைய வீழ்ச்சியுடன் தொடர்புடையவையாக இருந்தாலும் சரி.

எனவே இறைத் தூதர் (ஸல்) அவர்களின் காலத்தை சீர்தூக்கிப் பார்த்தால் பின்னர் போர்களின் முடிவுகளும் மஸ்ஜிதில் தான் எடுக்கப்பட்டு வந்தன. நீதிமன்றமும் அங்கே தான் நடந்து வந்தது. கல்வியும் அங்கேதான நிகழ்ந்து வந்தது. இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், மஸ்ஜித் என்பது வெறும் அல்லாஹ் அல்லாஹ் என்று கூறுவதற்காக மட்டுமானது கிடையாது. மாறாக சமுதாயத்தின் தேவைகளுடன் தொடர்பு கொண்ட வேறு சில பணிகளும் மஸ்ஜித்களில் செய்யப்படலாம். ஏனெனில், இஸ்லாத்தில் இறை தியானம் என்பது மனிதன் ஸுப்ஹானல்லாஹ்; ஸுப்ஹானல்லாஹ் என்று மட்டும் கூறிக் கொண்டிருப்பதன் பெயர் அல்ல. இன்னும் கூறப்போனால், ஒருவர் மனைவிக்கு சேவகம் செய்கின்றார் என்றால் அதுவும் கூட மார்க்கம் ஆகும். ஒரு நபர் மக்களின் சண்டை சச்சரவுகளை களைகின்றார் மேலும், அவர்களுக்குள் சமாதானம் செய்து வைக்கின்றார் என்றால் அதுவும் கூட மார்க்கம் ஆகும். எனவே எந்த பணிகள் எல்லாம் சமுதாயத்திற்கு நன்மை பயக்கின்றனவோ அந்த அனைத்துப் பணிகளும், மேலும் எந்தப் பணிகள் சமுதாயத்தின் ஒழுக்கம் மற்றும் அதன் மார்க்க நிலைகளை உயர்த்துகின்றனவோ அவை இறை தியானத்தில் அடங்கும். மேலும் அவற்றை மஸ்ஜிதில் செய்வது ஆகுமானது ஆகும். இறைத் தூதர் (ஸல்) அவர்களின் காலத்தில் யாராவது ஒரு விருந்தினர் வந்து விட்டால் பின்னார், இன்ன விருந்தினர் வந்துள்ளார்; உங்களில் எவர் அவரை அழைத்து செல்வார் என்று அன்னார் (ஸல்) பள்ளிவாசலிலேயே ஸஹாபிகளை நோக்கி கூறுவார்கள். தற்போது வெளிப்படையில் இது உணவிற்கான கேள்வியாக இருந்தது. ஆனால், உண்மையில் மார்க்க விவகாரமாக இருந்தது. ஏனெனில், இதனால் ஒரு மார்க்கத் தேவை முழுமையாகி வந்தது. மக்கள் தவறுதலாக மார்க்கத்தின் அர்த்தங்களை மிகவும் குறுகியதாக ஆக்கியுள்ளார்கள். ஆனால், மனிதன் இறைவனுடன் தொடர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக மார்க்கம் இறங்கியுள்ளது. மேலும் இறைவன் எவ்வித் தொண்டும் இன்றி அடியானை சந்திப்பதில்லை. இன்னும் கூறப்போனால், அனாதைகளை பராமரிப்பதால் அவன் அடியானை சந்திக்கின்றான். மனைவிக்கு சேவை செய்வதால் அவன் சந்திக்கின்றான். அவன் காஃபிருக்கு தப்லீஃக் செய்வதால் சந்திக்கின்றான். அவன் நம்பிக்கையாளரை துன்பத்திலிருந்து காப்பாற்றுவதால் சந்திக்கின்றான். எனவே இந்த விஷயங்கள் மஸ்ஜித்களில் கூறப்படுகின்றன என்றால் பின்னர் அது உலகம் விவகாரம் அல்ல. மாறாக, மார்க்கத்தினுடைய அங்கமாவே இருக்கும். ஆயினும், பள்ளிவாசல்களில் முற்றிலும் தனிப்பட்ட விவகாரங்கள் தொடர்பாக பேசுவது தடையுள்ளது. உதாரணமாக, உங்களது மகளுடைய திருமணம் தொடர்பான தீர்மானம் என்னவாயிற்று? என்று நீங்கள் ஒருவரிடம் கேட்டீர்கள் என்றால் அல்லது, எனது பதவி உயர்வு வழக்கு இருக்கின்றது; அதிகாரி ஒப்புக் கொள்ள மறுக்கின்றார் என்று நீங்கள் கூறுகின்றீர்கள் என்றால் இந்த விஷயங்கள் இமாமைத் தவிர மற்றவர்களுக்கு மஸ்ஜித்களில் ஆகுமானவை கிடையாது. ஏனெனில் இமாமின் மீது முழு சமுதாயத்தின் பொறுப்பும் இருக்கின்றது. மேலும், அதற்கான தேவையை உணரும் பட்சத்தில் அந்த விவகாரங்கள் தொடர்பாகவும் மக்களிடம் பேசலாம். இது அந்த இமாமிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் ஆகும். எவ்வாறு இருப்பினும், பள்ளிவாசல்களில் முற்றிலும் தனிப்பட்ட பணிகள் தொடர்பாக பேசுவது தடுக்கப்பட்டதாகும்.

உதாரணமாக இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவருடைய ஒரு பொருள் தொலைந்து விட்டதென்றால்; பின்னர் அவர் அது தொடர்பாக மஸ்ஜிதில் அறிவிப்பு செய்தல் கூடாது. ஆக, பள்ளிவாசல்கள் வெறும் இறை தியானத்திற்காக மட்டுமானவை கிடையாது. ஆனால், இறை தியானம் என்பது அந்த அனைத்து விஷயங்களையும் உள்ளடக்கியுள்ளது. அதாவது மனித இனத்தின் அரசியல் ரீதியிலான, அறிவு ரீதியிலான மற்றும் சமுதாய மேன்மை மற்றும் முன்னேற்றத்திற்கான அனைத்து விஷயங்களும் அதில் அடங்கும். ஆயினும், சண்டை, சச்சரவுகள் குழப்பம் அல்லது சட்டத்தை மீறுதல் போன்றவற்றுடன் தொடர்புடைய அந்த அனைத்து விஷயங்களும் அவற்றின் பெயர் சமுதாயப் பணிகள் என்று வைத்துக் கொண்டாலும் சரியே ; அல்லது மார்க்கப் பணிகள் என்று வைத்துக் கொண்டாலும் சரியே அவற்றை மஸ்ஜித்களில் செய்வது ஆகுமானவை கிடையாது. இதே போன்று மஸ்ஜித்களில் தனிப்பட்ட விவகாரங்கள் தொடர்பாக பேசுவதும் கூட தடுக்கப்பட்டது ஆகும். ஏனெனில், இஸ்லாம் மஸ்ஜிதை பைத்துல்லாஹ்வாக ஆக்கியுள்ளது. மேலும் அதனை அல்லாஹ்வை நினைவுகூர்வதற்கான இடமாக ஆக்கியுள்ளது. (தஃப்ஸீரே கபீர் தொகுதி 8, பக்கம் 27 = 29)

* * * * * *

# ஜுமுஆ பேருரை

**ஸரிய்யா ரஜீஃ போரின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கை மற்றும் கண்ணியத்திற்குரிய ஸஹாபிகளின் தியாகங்கள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அவர்கள் கொண்டிருந்த நன்றியுணர்வு மற்றும் நேசம் தொடர்பான ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள்**

ஹஸ்ரத் ஸைது (ரலி) மற்றும் குபைப் ஆகிய இருவரும் ஷஹீதாக்கப்பட்ட நாளன்று, வ அலைக்குமுஸ்ஸலாம்; உங்கள் இருவர் மீதும் சாந்தி உண்டாகட்டுமாக! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிக் கொண்டிருந்ததை ஸஹாபிகள் செவியுற்றனர்

என் இறைவா! உமது நபிக்கு எங்களுடைய நிலைகளை குறித்து தகவல் தெரிவித்து விடுவாயாக! என்று ரஜீஃ போர் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்கள் அல்லாஹ்விடம் துஆ செய்தார்கள்

மேலும் அல்லாஹ்வே! நான் பகலின் ஆரம்பம் முதல் உம் மார்க்கத்தை பாதுகாத்து வந்துள்ளேன். இப்பொழுது பகலின் இறுதி வேளையில் எனது உடலை நீ பாதுகாப்பாயாக!என்றும் அன்னார் (ரலி) துஆ செய்தார்கள்

ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களின் பதிலைக் கேட்டவுடன், அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மத் (ஸல்) அவர்களின் தோழர்கள் அவர்களை எந்த அளவு நேசிக்கிறார்களோ அதே போன்று வேறு எவரும் பிறரை நேசித்தாக நான் கண்டதில்லை என்று அபூ ஸுஃப்யான் தன்னையுமறியாமல் கூறினார்.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 17 மே 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **ஹிஜ்ரத் மாதம் 17ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ரஜீஃ போர் பற்றி கூறப்பட்டு வந்தது. ஹதீஸ்களிலும் வரலாற்று நூல்களிலும் இதனுடைய கூடுதல் விவரம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது; ஸஹீஹ் புகாரியில் ரஜீஃ சம்பவம் குறித்து இவ்வாறு விளக்கமாக கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அபூ ஹூரைரா (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்துப் பேர் கொண்ட படையொன்றை தகவல் அறிந்து கொண்டு வருவதற்காக அனுப்பினார்கள். ஹஸ்ரத் ஆஸீம் பின் ஸாபித் அன்ஸாரி (ரலி) அவர்களை அப்படையினருக்கு அமீராக நியமித்திருந்தார்கள். அவர்கள் புறப்பட்டார்கள். மக்காவுக்கும் உஸ்ஃபானுக்கும் இடையிலுள்ள ஹத்தா என்ற இடத்தில் இருந்தபோது ஹுஸைல் குலத்தைச் சேர்ந்த பனூ லஹ்யான் என்றழைக்கப்பட்ட கிளையினருக்கு அவர்களைப் பற்றித் தெரிவிக்கப்பட்டது. அந்த எதிராளி கோத்திரத்திலிருந்து ஏறக்குறைய இருநூறு நபர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக புறப்பட்டார்கள். அவர்கள் அனைவரும் அம்பெய்தும் வீரர்களாக இருந்தனர். அவர்கள் முஸ்லிம்களின் பாதச் சுவடுகளைப் பின்தொடர்ந்து சென்றனர். முஸ்லிம்கள் பேரீச்சம் பழங்களைக் உண்ட இடத்திற்கு இவர்கள் வந்தடைந்து விட்டார்கள். அதாவது ஸஹாபிகள் மதீனாவில் இருந்து பயண உணவாக பேரீத்தம் பழங்களை கொண்டு வந்திருந்தார்கள். இது யஸ்ரப் உடைய பேரீச்சம் பழம்; இதை அடையாளம் கண்டு கொள்ளுங்கள் என்று பனூ லஹ்யான் கூறினர். அவர்கள் முஸ்லிம்களின் பாதச் சுவடுகளைப் பின்தொடர்ந்து சென்றனர். ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்களும் அவர்களின் தோழர்களும் இவர்களைக் கண்ட போது ஒரு குன்றின் மேலே தஞ்சம் புகுந்தனர். அப்போது அவர்கள் முஸ்லிம்களைச் சுற்றி வளைத்துக் கொண்டு அவர்களைப் பார்த்து, நீங்கள் கீழே இறங்கி வந்துவிட்டால், நீங்கள் சரணடைந்து விட்டால் உங்களில் யாரையும் நாங்கள் கொலை செய்ய மாட்டோம் என்று உங்களுக்கு உறுதிமொழியும் வாக்குறுதியும் தருகிறோம் என்று கூறினர். அப்போது அந்த போர் படைக்கு அமீராக இருந்த ஹஸ்ரத் ஆஸிம் பின் ஸாபித் (ரலி) அவர்கள் நான் ஒரு காஃபிரின் (வாக்குறுதியை நம்பி அவனுடைய) பாதுகாப்பில் இறங்கிச் செல்ல மாட்டேன் என்று கூறிவிட்டு, இறைவா! எங்களைப் பற்றிய செய்தியை உன் தூதருக்கு தெரிவித்து விடு! என்று துஆ செய்தார்கள். அப்போது அவர்கள் முஸ்லிம்கள் மீது அம்பு எய்த ஆரம்பித்தனர். அதாவது எதிரிகள் ஸஹாபிகள் மீது அம்பு எய்தனர். அவர்கள் ஹஸ்ரத் ஆஸிம் பின் ஸாபித் (ரலி) அவர்கள் உட்பட ஏழு பேரை கொன்று விட்டனர். மூன்று பேர் உறுதி மொழி மற்றும் வாக்குறுதியின் பேரில் இறங்கி வந்தனர். அவர்களின் பெயர்கள்; குபைப் அன்ஸாரி, இப்னு தஸ்னா, அப்துல்லாஹ் பின் தாரிக் ஆகியோர். எதிரிகள் இம்மூவரையும் பிடித்துக் கொண்டு தங்களுடைய வில்லின் நாணை அவிழ்த்து அதன் மூலம் அவர்களைப் பிணைத்தனர். இதைக் கண்ட அந்த மூன்றாம் மனிதர் இது முதலாவது நம்பிக்கைத் துரோகம். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உங்களுடன் வரமாட்டேன்; நிச்சயமாக அம்மக்களிடத்தில் முன்மாதிரி உள்ளது என்று கூறிவிட்டார். அதாவது ஷஹீதுகளைக் குறித்து அவர் கூறினார். எனவே அவர்கள் அந்த ஸஹாபியை இழுத்துச் செல்ல விரும்பினர். அவர்களுடன் செல்ல வேண்டும் என நிர்பந்தித்தனர். ஆனால் அவர் மறுத்து விட்ட போது, அவரை அவர்கள் ஷஹீதாக்கி விட்டனர். அவர்கள் ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களையும், ஹஸ்ரத் இப்னு தஸ்னா (ரலி) அவர்களையும் கொண்டு சென்று மக்காவில் விலைக்கு விற்று விட்டனர். ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள் பனூ ஹாரிஸ் பின் ஆமிரை பத்ர் போரின் போது கொன்றிருந்தார்கள். ஹஸ்ரத் குபைப் (ரலி) அம்மக்களிடத்தில் கைதியாக இருந்தார்கள்.

இது புகாரியுடைய அறிவிப்பாகும். புகாரியுடைய அறிவிப்பின் அடிப்படையில் பார்க்கும் போது பத்து ஸஹாபிகளைக் கொண்ட இந்த குழு உளவுப் பணிக்காக நியமிக்கப்பட்டிருந்ததாக தெரிகிறது. இக்குழு ஒளிந்து மறைந்து கொண்டே செல்லும் போது இவர்கள் உண்டு வீசிய பேரீத்தம் பழத்தின் கொட்டைகளை அடையாளம் கண்டு கொண்ட ஒரு பெண்மணி இது யஸ்ரப் உடைய பேரீத்தம் பழக் கொட்டைகள் என்று கூச்சலிட ஆரம்பித்தாள். அப்போது எதிரிகள் இவர்கள் மீது தாக்குதல் தொடுத்து விட்டார்கள். ஆனால் அதிகமான வரலாற்றாசிரியர்கள் கூறுவதென்னவென்றால், இந்தக் குழு சுற்றுவட்டாரத்தின் சூழ்நிலைகளை ஆய்வு செய்வதற்காக ஆயத்தமாக இருந்தது. இது புறப்பட்டு சென்றிருக்கவில்லை. பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்த ஒரு குழுவுடன் இவர்களை அன்னார் (ஸல்) அனுப்பி வைத்து விட்டார்கள்.

இதைக் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களும் பல்வேறு வரலாற்று நூல்களில் இருந்து அவர்கள் தீர்மானித்த விஷயம் என்னவென்றால், இந்த ஸஹாபிகள் அந்த குழுவுடன் சென்றார்கள்; அம்மக்களுடன் சென்றார்கள். ஆகவே புகாரி அல்லது வேறு எந்த வரலாற்று நூலில் அவர்கள் ஒளிந்து மறைந்து பயணம் செய்தார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதோ அது அறிவிப்பாளர்களின் மறதியாக தெரிகிறது. ஏனெனில், இப்பொழுது இந்த குழுவுக்கு ஒளிந்து மறைந்து செல்ல வேண்டிய அவசியம் இல்லை. இவர்கள் அஸல் மற்றும் காராஹ் கோத்திரத்தைச் சார்ந்த மக்களுடன் சென்று கொண்டிருந்தார்கள். ஆனால்,

இவர்கள் உஸ்ஃபானுக்கும் மக்காவுக்கும் இடையில் சென்றடைந்திருந்த போது அஸல் மற்றும் காராஹ் கோத்திரத்தைச் சேர்ந்த மக்கள் ஒரு சூழ்ச்சி திட்டத்தின் அடிப்படையில் இவர்களை அழைத்துக் கொண்டு சென்று கொண்டு இருந்தார்கள். அவர்கள் இந்த இடத்தை அடைந்தபோது தமது உடன்படிக்கையை முறித்துக் கொண்டு ஏற்கனவே அவர்கள் தீட்டி இருந்த திட்டத்தின் அடிப்படையில் பனூ லஹ்யானுக்கு தகவல் கொடுத்து விட்டார்கள். அவர்கள் தாக்குதல் தொடுப்பதற்காக 200 நபர்களுடன் அங்கு வந்தடைந்து விட்டார்கள்.

இதை நிச்சயமாக அனுமானிக்க முடிகிறது. அல்லாஹ்வே நன்கு அறிவான்.

எவ்வாறு இருப்பினும், பனூ லஹ்யானுடைய 200 நபர்கள் தாக்குதல் தொடுத்தனர். அவர்களில் 100 பேர் திறமையான வில்லாளர்கள் இருந்தனர். அவர்கள் ஸஹாபிகளை சுற்றி வளைத்துக் கொண்டனர். அந்த படையின் அமீரான ஹஸ்ரத் ஆஸிம் பின் ஸாபித் (ரலி) அவர்களுக்கும், அவர்களுடைய தோழர்களுக்கும் இம்மக்களைப் பற்றி தெரிய வந்தபோது அவர்கள் ஃபத் ஃபத் எனும் பெயர் கொண்ட ஒரு மலை மீது ஏறிக் கொண்டனர். மற்றோர் அறிவிப்பில் இதனுடைய பெயர் கர்தத் என்று கூறப்பட்டுள்ளது. இணை வைப்பாளர்கள் ஸஹாபிகளை சுற்றி வளைத்துக் கொண்டனர். நீங்கள் எங்களை நோக்கி இறங்கி வந்தீர்கள் என்றால், நாங்கள் யாரையும் கொலை செய்ய மாட்டோம் என்று உறுதிமொழியும் வாக்குறுதியும் தருகிறோம். அல்லாஹ்வின் மீது ஆணையாக! உங்களை கொலை செய்வதற்கான எண்ணம் எங்களுக்கில்லை ; உங்களின் காரணமாக மக்கா வாசிகளிடமிருந்து ஏதேனும் கேட்டுப் பெறலாம் என்பதே எங்களுடைய நோக்கமாகும் என்று அவர்கள் கூறினர். அதைக் கேட்ட ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்கள் இறைவன் மீது ஆணையாக, நான் எந்த ஒரு நிராகரிப்பாளரின் அடைக்கலத்தை பெறுவதற்காகவும் கீழே இறங்கி வரமாட்டேன்; வாழ்நாள் முழுவதும் எந்த ஒரு இணை வைப்பாளருடைய அடைக்கலத்தையும் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று நான் நேர்ந்துள்ளேன் என்று கூறினார்கள். நாங்கள் ஒருபோதும் இணை வைப்பாளருடைய வாக்குறுதியை ஒப்புக் கொள்ள மாட்டோம் என்று அவர்களுடைய இரண்டு தோழர்களும் பதில் அளித்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்கள் அல்லாஹ்விடம் துஆ செய்தார்கள்.

اَللّٰهُمَّ اَخْبِرْ عَنَّا نَبِيَّكَ

என் இறைவா! உமது நபிக்கு எங்களுடைய நிலைகளை குறித்து தகவல் தெரிவித்து விடுவாயாக!

பிறகு அவ்விரு கூட்டத்திற்கும் இடையில் முறையான போர் ஆரம்பித்தது. படைத் தளபதியான ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்கள் தமது வீரத்தையும், துணிவையும் வெளிப்படுத்தியவாறு போரிட்டுக் கொண்டிருந்தார்கள். அத்துடன் கவிதைகளையும் வாசித்துக் கொண்டிருந்தார்கள். அதனுடைய மொழியாக்கம் என்னவென்றால், நான் வீரனாகவும், திறமையான வில்லாளர்களாகவும் இருக்கும் போது, எந்த காரணத்திற்காக நான் ஆயுதத்தை கீழே போட வேண்டும்? எனது வில்லில் உறுதியான நாண் இணைக்கப்பட்டுள்ளது. இந்த வில்லிலிருந்து நீளமான, அகலமான, மிகக் கூர்மையான அம்பு விரைவாக வெளிப்படுகின்றன. மரணம் நிச்சயமானது; வாழ்வு நிச்சயமற்றது ஆகும். அல்லாஹ் எதையெல்லாம் நிர்ணயித்துள்ளானோ அது மனிதன் மீது கண்டிப்பாக இறங்கியே தீரும். மனிதன் அல்லாஹ்வின் பக்கமே திரும்பிச் செல்ல வேண்டியதுள்ளது. நான் உங்களுடன் சண்டையிடவில்லை என்றால் எனது தாய் என்னை தொலைந்து போனவனாகக் காண்பாள்.

இது அந்த கவிதைகளுடைய மொழியாக்கம் ஆகும்.

அனைத்து ஸஹாபிகளும் மிகவும் வீரத்துடனும், துணிவுடனும் எதிரிகளுக்கு முன்னால் நிலைத்து நின்று அவர்களை எதிர்த்துக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்கள் எதிரிகளின் மீது அம்புகளை பொழிந்து கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால், அனைத்து அம்புகளும் முடிந்து விட்டன. பிறகு ஈட்டியை ஏந்திக் கொண்டு சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். ஈட்டியும் உடைந்து விட்டது. வாள் மட்டுமே எஞ்சி இருந்தது. தமது ஷஹாதத்தைப் பற்றி அவர்களுக்கு உறுதியாக தெரிந்த உடன் தமது மானத்தை மறைத்துக் கொள்வது குறித்து அவர்களுக்கு அச்சம் ஏற்பட்டது. ஏனெனில், எதிரி யாரையெல்லாம் ஷஹீதாக்கினானோ அவர்களுடைய சடலங்களை சிதைத்து, ஆடையற்றதாக ஆக்கிக் கொண்டிருந்தான். அந்நேரத்தில் அவர்கள் தம் இறைவனிடம் இவ்வாறு மன்றாடினார்கள்:

اَللّٰهُمَّ حَمَيْتُ دِيْنَكَ

أَوَّلَ نَهَارِيْ فَاحْمِ لِيْ لَحْمِيْ آخِرَهُ

அல்லாஹ்வே! நான் பகலின் ஆரம்பம் முதல் உம் மார்க்கத்தை பாதுகாத்து வந்துள்ளேன். இப்பொழுது பகலின் இறுதி வேளையில் எனது உடலை நீ பாதுகாப்பாயாக!

இந்த துஆவை செய்து விட்டு பிறகு சண்டையில் மூழ்கிப் போனார்கள். வாளுடைய கைப்பிடியைக் கொண்டு இரு நபர்களை கடுமையாக காயப்படுத்தினார்கள். இன்னொரு நபரை கொன்று விட்டார்கள். பிறகு இறைவனுடைய அழைப்பு வந்தது. ஷஹாதத் பானத்தை அருந்தி விட்டார்கள். இவ்வாறு தம் ஆறு தோழர்களுடன் சேர்ந்து ஷஹாதத் எனும் மாபெரும் பதவியில் அமர்ந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை எடுத்துரைத்தவாறு எழுதுகிறார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஃபர் மாதம் ஹிஜ்ரீ 4-ம் ஆண்டு 10 ஸஹாபிகளைக் கொண்ட ஒரு குழு ஒன்றை ஆயத்தம் செய்தார்கள். அவர்களுக்கு ஆஸிம் பின் ஸாபித் (ரலி) அவர்களை அமீராக நியமித்தார்கள். மேலும் அவர்களுக்கு நீங்கள் மறைவாக மக்காவிற்கு அருகில் சென்று குறைஷிகளின் சூழலை அறிந்து கொண்டு வர வேண்டும் என்றும், அவர்களின் நடவடிக்கைகள் மற்றும் எண்ணங்கள் தொடர்பாகவும் தமக்கு தகவல் கொடுக்கும்படியும் அவர்களுக்கு கட்டளையிட்டு இருந்தார்கள். ஆனால், தற்போது அந்தக் குழு புறப்பட்டிருக்கவில்லை. அந்த நேரத்தில் அஸல் மற்றும் காராஹ் கோத்திரத்தை சார்ந்த சில மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். எங்களது கோத்திரத்தில் பலர் இஸ்லாத்தின் பக்கம் ஆர்வம் உடையவர்களாக இருக்கின்றனர்; எங்களை முஸ்லிம்கள் ஆக்குவதற்காவும், எங்களுக்கு இஸ்லாமியப் போதனையை கற்றுக் கொடுப்பதற்காகவும் தாங்கள் எங்களுடன் சில நபர்களை அனுப்பி வையுங்கள் என்று கூறினர்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்களின் விருப்பத்தை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். உளவுபார்த்து வருவதற்காக ஆயத்தம் செய்து வைத்திருந்த அக்குழுவை அவர்களுடன் அனுப்பி வைத்தார்கள். ஆனால், உண்மையில் அந்த மக்கள் பொய்யர்களாக இருந்தனர் என்பது பின்னர் தெரிய வந்தது. பனூ லஹ்யான் தனது தலைவனான ஸுஃப்யான் பின் காலித் உடைய கொலைக்கு பழி வாங்குவதற்காக இந்த சதித் திட்டத்தை தீட்டி இருந்தனர். இதன் காரணமாக முஸ்லிம்கள் மதீனாவை விட்டு வெளியேறினால் அவர்கள் மீது தாக்குதல் நடத்தி விட வேண்டும் என்பது அந்த திட்டமாக இருந்தது. பனூ லஹ்யான் இந்த தொண்டுக்கு பிரதிபலனாக அஸல் மற்றும் காராஹ் மக்களுக்கு ஏராளமான ஒட்டகங்களை பரிசாக நிர்ணயித்திருந்தார்கள். அஸல் மற்றும் காராஹ்வை சார்ந்த இந்த நம்பிக்கை துரோகிகள் உஸ்வான் மற்றும் மக்காவுக்கு இடையில் உள்ள இடத்தை அடைந்த போது, எங்களுடன் முஸ்லிம்களும் வருகின்றனர். நீங்கள் வந்து விடுங்கள் என்று பனூ லஹ்யானுக்கு ரகசியமாக தகவல் அனுப்பி வைத்தனர். ஆகவே பனூ லஹ்யான் உடைய 200 இளைஞர்கள் முஸ்லிம்களை விரட்டிப் பிடிப்பதற்காக புறப்பட்டனர். அவர்களில் நூறு பேர் அம்பெய்தும் வீரர்களாக இருந்தனர். அவர்கள் ரஜீஃ எனும் இடத்தில் முஸ்லிம்களை சுற்றிவளைத்தனர். 10 பேர் 200 வீரர்களை எவ்வாறு எதிர் கொள்ள முடியும்? எனினும் முஸ்லிம்களுக்கு ஆயுதங்களை கீழே போட்டு சரணடைவதற்கான போதனை வழங்கப்படாததால் உடனடியாக இந்த ஸஹாபிகள் அருகில் இருந்த ஒரு மலை மீது ஏறி போரிடுவதற்கு ஆயத்தமாகிவிட்டனர். காஃபிர்களுக்கு ஏமாற்றுதல் என்பது எவ்வகையிலும் ஓர் இழிவான காரியமாக இருந்ததில்லை. நீங்கள் மலையிலிருந்து இறங்கி வாருங்கள்; நாங்கள் உங்களை கொலை செய்ய மாட்டோம் என்று உறுதியான உடன்படிக்கை செய்வதாக காஃபிர்கள் அவர்களிடம் கூறினர். அதற்கு ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்கள் உங்களுடைய வாக்குறுதியின் மீதோ உடன்படிக்கையின் மீதோ எங்களுக்கு எந்த நம்பிக்கையும் இல்லை. உமது இந்த வார்த்தையின் மீது நாங்கள் நம்பிக்கை வைத்து ஒருபோதும் கீழே இறங்க மாட்டோம் என்று கூறிவிட்டு, வானத்தை நோக்கி பார்த்தவாறு இறைவா! நீ எங்களது நிலையை பார்த்துக் கொண்டிருக்கின்றாய். உனது தூதருக்கு எங்களது நிலைகளை பற்றி அறிவித்து விடுவாயாக!என்று கூறினார்கள்.

சுருக்கமாக, ஆஸிம் (ரலி) அவர்களும், அவர்களின் தோழர்களும் போரிட்டனர்; இறுதியில் சண்டையிட்டவாறே ஷஹீதாகி விட்டார்கள்.

அல்லாஹ்வே! எனது உடலை

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

பாதுகாப்பாயாக! என்று ஹஸ்ரத் ஆஸிம் பின் ஸாபித் (ரலி) அவர்கள் ஏற்கனவே துஆ செய்திருந்தார்கள். அவர்களின் உடலுக்கு இறை பாதுகாப்பு எவ்வாறு கிடைத்தது? என்பதைக் குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

இதே ரஜீஃ சம்பவத்தின் தொடர்ச்சியாக ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது: பனூ லஹ்யானுடைய கைகளால் ரஜீஃ -ல் ஷஹீதாக்கப்பட்டவர்களுள் ஆஸிம் பின் ஸாபித் (ரலி) அவர்களும் இருந்தார்கள் என்ற தகவல் மக்கத்து குறைஷியர்களுக்கு கிடைத்தது. ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்கள் பத்ர் போரின் போது குறைஷியர்களின் ஒரு பெரும் தலைவரை கொன்றிருந்தார்கள். எனவே அவர்கள் ரஜீஃ என்ற அந்த இடத்தை நோக்கி சிறப்பான நபர்களை அனுப்பி வைத்தனர். மேலும் ஆஸிமுடைய தலையையோ அல்லது ஏதாவது ஓர் உறுப்பையோ துண்டித்துக் கொண்டு வரும்படி அந்த நபர்களுக்கு வலியுறுத்தி கூறியிருந்தார்கள். அதன் மூலம் அவர்களுக்கு ஆறுதல் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், பழிவாங்கும் உணர்வைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் அவர்கள் இவ்வாறு செய்தனர். இன்னோர் அறிவிப்பில் வருகின்றது; ஆஸிம் (ரலி) அவர்கள் எந்த நபரை கொலை செய்திருந்தார்களோ அவரின் தாயார் ஸலாஃபா பின்த் ஸஃது, தன் மகனுடைய கொலையாளியின் கபாலத்தில் மது ஊற்றி அருந்துவேன் என்று சபதம் எடுத்திருந்தாள். எவர் அவர்களின் தலையை கொண்டு வருவாரோ அவருக்கு 100 ஒட்டகங்கள் கொடுக்கப்படும் என்று பரிசை நிர்ணியித்திருந்தாள்.

இந்த அளவுக்கு அவர்களிடத்தில் பழிவாங்கும் எண்ணமும், கோபத்தின் நெருப்பும் இருந்தது. ஆனால், இறைவனுடைய செயல் எவ்வாறானதாக இருந்தது என்றால், இந்த மக்கள் அங்கு சென்றடைந்த போது, குளவிகள் மற்றும் தேனீக்களின் கூட்டம் ஆஸிம் (ரலி) அவர்களின் உடலின் மீது அமர்ந்திருந்தக் காட்சியைக் கண்டார்கள். அவை எவ்வகையிலும் அங்கிருந்து எழுந்திருப்பதாக தெரியவில்லை. அந்த குளவிகளையும், தேனீக்களையும் அங்கிருந்து அகற்றுவதற்கு அம்மக்கள் எவ்வளவோ முயற்சி செய்தனர். இறுதியில் கட்டாயத்திற்குள்ளாகி தோல்வி அடைந்து திரும்பினர். அதன் பிறகு விரைவிலேயே மழையுடன் கூடிய புயல் ஒன்று வீசியது. ஆஸிம் (ரலி) அவர்களின் உடலை அது அங்கிருந்து எங்கோ அடித்துச் சென்று விட்டது.

பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது; அதாவது, ஆஸிம் (ரலி) அவர்கள் முஸ்லிமான போது, இனி தாம் எல்லா விதமான இணை வைப்பிற்குரிய விஷயங்களில் இருந்து முற்றிலும் விலகி இருப்பேன் என்று உறுதிமொழி எடுத்திருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால், இணை வைப்பாளர்களை தொடக் கூட மாட்டேன் என்று உறுதி எடுத்திருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இவர்களின் ஷஹாதத் மற்றும் இந்த சம்பவம் பற்றி செய்தி கிடைத்த போது, இறைவன் தனது அடியார்களின் உணர்வுகளை எந்த அளவுக்கு பாதுக்கின்றான் என்று பாருங்கள். மரணத்திற்கு பிறகு கூட அவன் ஆஸிம் (ரலி) அவர்களின் உறுதிமொழியை நிறைவேற்றினான். இணை வைப்பாளர்கள் அன்னாரை தொடுவதிலிருந்து அவன் பாதுகாத்தான் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்கள் ஹம்யுத் தபர் என்றும் அழைக்கப்படுகின்றார்கள். அதாவது தேனீக்களின் மூலமாக பாதுகாக்கப்பட்டவர் என்பது அதன் பொருள் ஆகும். அல்லாஹ் மரணத்திற்கு பிறகு தேனீக்களின் மூலமாக அன்னாரை பாதுகாத்தான்.

அடுத்ததாக ஹஸ்ரத் முஅத்திப் பின் உபைத் மற்றும் அநீதிக்குள்ளான மற்றவர்களின் ஷஹாதத் பற்றிய குறிப்பு உள்ளது. ஹஸ்ரத் முஅத்திப் பின் உபைத் (ரலி) அவர்கள் போரிட்டு கடுமையாக காயம் அடைந்து போனார்கள். எதிரிகள் அவர்களை அடைந்து அவர்களை ஷஹீதாக்கி விட்டார்கள். இவர்களை தவிர இன்னும் 5 ஸஹாபிகளும் இவ்வாறு வீரத்துடன் சண்டையிட்டவாறு எதிரிகளின் அம்புகளுக்கு இரையாகி ஷஹீத் ஆகிவிட்டார்கள். இவ்வாறு மொத்தம் 7 ஸஹாபிகள் ஷஹீதாகிவிட்டார்கள். மீதமிருந்த மூவர் ஹஸ்ரத் குபைப் பின் அதீ (ரலி), ஹஸ்ரத் ஸைத் பின் தஸ்னா மற்றும் அப்துல்லாஹ் பின் தாரிக் (ரலி) ஆகியோர். நாங்கள் உங்களை ஒன்றும் செய்ய மாட்டோம்; உங்களுக்கு அடைக்கலம் கொடுக்கின்றோம்; நீங்கள் எங்களிடம் சரணடைந்து விடுங்கள் என்று எதிரிகள் அந்த மூன்று ஸஹாபிகளுக்கும் உறுதிமொழியும் வாக்குறுதியும் கொடுத்தார்கள். ஆகவே அந்த ஸஹாபிகள் மலையிலிருந்து அவர்களை நோக்கி இறங்கினர். எதிரிகள் அந்த ஸஹாபிகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த போது தம் வில்லுடைய நாணை அவிழ்த்து அதை கொண்டு அந்த ஸஹாபிகளை கட்டினார்கள்.

அப்போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் (ரலி) அவர்கள் இது நீங்கள் செய்த முதல் உடன்படிக்கை மீறுதலாகும். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உங்களுடன் வரமாட்டேன். இந்த ஷஹீதுகளுடைய முன்மாதிரி எனக்கு பிடித்தமானதாக உள்ளது என்று கூறினார். எதிரிகள் அவரை வலுக்கட்டாயமாக இழுத்துச் செல்ல விரும்பினர். அவரை தம்முடன் அழைத்துச் செல்வதற்கு எவ்வளவோ முயற்சி செய்தனர். ஆனால், அப்துல்லாஹ் பின் தாரிக் (ரலி) அவர்கள் உடன்படவில்லை. ஆகவே அவர்கள் அப்துல்லாஹ் (ரலி) அவர்களை ஷஹீதாக்கி விட்டார்கள்.

சில அறிவிப்புகளின் அடிப்படையில் எதிரிகள் இந்த மூன்று ஸஹாபிகளையும் சிறை பிடித்துக் கொண்டு மக்காவை நோக்கி புறப்பட்டு சென்றார்கள் என்று உள்ளது. அவர்களை மக்கத்தினர் கைகளில் விற்று விட விரும்பினர். இந்த குழு மக்காவில் இருந்து 22 கி.மீ தூரத்தில் வட திசையில் உள்ள மார்ருஸ் ஸஹ்ரான் என்ற இடத்தை அடைந்தபோது அப்துல்லாஹ் பின் தாரிக் (ரலி) அவர்கள் தம் கைகளை விடுவித்துக் கொண்டனர். வாளேந்தி சண்டையிட ஆரம்பித்தனர். அவர்களிடத்தில் இந்த அளவு ஜிஹாதுக்கான ஆர்வத்தை எதிரிகள் கண்ட போது உடனே பின்வாங்கிக் கொண்டு அவர்கள் மீது கல்லெறிய ஆரம்பித்தனர். எந்த அளவுக்கு என்றால் அவர்களை ஷஹீதாக்கி விட்டனர். அவர்களுடைய கபர் மார்ருஸ் ஸஹ்ரானில்தான் உள்ளது.

இதை குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

7 ஸஹாபிகள் கொல்லப்பட்ட போது,குபைப் பின் அதீ, ஸைத் பின் தஸ்னா மற்றும் இன்னொரு ஸஹாபி மட்டுமே எஞ்சி இருந்தனர். எதிரிகளுடைய உண்மையான நோக்கம் இவர்களை உயிரோடு பிடிக்க வேண்டும் என்பதாக இருந்தது. ஆகவே அப்போது எதிரிகள் இவர்களை பார்த்து இப்பொழுதாவது நீங்கள் கீழே இறங்கி வாருங்கள்; உங்களுக்கு எந்த துன்பத்தையும் தரமாட்டோம் என்று நாங்கள் வாக்குறுதி கொடுக்கிறோம் என்று கூறினார்கள். இந்த முறை இந்த அப்பாவி முஸ்லிம்கள் அவர்களுடைய சூழ்ச்சி வலையில் சிக்கி கீழே இறங்கி விட்டார்கள். கீழே இறங்கிய உடனேயே காஃபிர்கள் தமது வில்லுடைய நாணைக் கொண்டு அவர்களை கட்டிப் போட்டார்கள். இதைக் கண்ட ஹஸ்ரத் குபைப் (ரலி) மற்றும் ஸைத் (ரலி) ஆகியோரின் தோழராக இருந்த இன்னொரு நபரால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. வரலாற்றில் அவர்களின் பெயர் அப்துல்லாஹ் பின் தாரிக் என்று கூறப்பட்டுள்ளது. அவர்கள் இதை கண்ட போது, இது உங்களுடைய முதல் வாக்கு மீறுதலாகும். இனிமேல் நீங்கள் என்னவெல்லாம் செய்வீர்கள் என்று தெரியாது என்று உரக்கக் கூறினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் (ரலி) அவர்கள் அந்த மக்களுடன் செல்ல மறுத்து விட்டார்கள். ஆகவே காஃபிர்கள் கொஞ்ச தூரம் வரை அப்துல்லாஹ் (ரலி) அவர்களை இழுத்துக் கொண்டு, வலுக்கட்டாயமாக அவர்களை கொண்டு சென்றார்கள். பிறகு அவர்களை அங்கேயே கொன்று வீசிச் சென்றார்கள். இப்பொழுது அவர்களுடைய பழிவாங்குதல் நிறைவேறிவிட்டது. ஆகவே அவர்கள் குறைஷியர்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகவும், பணத்தின் மீதான ஆசையினாலும் குபைப் (ரலி) மற்றும் ஸைத் (ரலி) ஆகியோரை மக்காவை நோக்கி அழைத்துச் சென்றனர். அங்கு சென்றடைந்ததும் அவர்களை ஹாரிஸ் பின் ஆமிர் பின் நவ்ஃபல் உடைய மகன்கள் வாங்கிக் கொண்டார்கள். ஏனெனில், குபைப் (ரலி) அவர்கள் பத்ர் போரில் ஹாரிஸை கொன்றிருந்தார்கள். ஸைத் (ரலி) அவர்களை ஸஃப்வான் பின் உமையா வாங்கிக் கொண்டார்.

ஹஸ்ரத் குபைப் பின் அதீ ( ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸைத் பின் தஸ்னா (ரலி) ஆகியோரை இணை வைப்பாளர்கள் கைது செய்தனர். அவர்களை அம்மக்கள் மக்காவுக்கு அழைத்துச் சென்றனர். மக்கா சென்றடைந்ததும் அந்த இரு ஸஹாபிகளையும் விற்று விட்டார்கள். பத்ர் போரில் குபைப் (ரலி) அவர்கள் ஹாரிஸை கொன்றிருந்தார்கள். ஆகவே ஹாரிஸ் பின் ஆமிருடைய மகன்கள் தன் தந்தை ஹாரிஸ் உடைய கொலைக்கு பழிவாங்குவதற்காக அவர்களை வாங்கிக் கொண்டார்கள். ஏற்கனவே இது கூறப்பட்டு விட்டது. இப்னு இஸ்ஹாக் உடைய கூற்றின் அடிப்படையில் ஹுஜைர் பின் அபூ ஈஹாப் தமீமி உடைய கூற்றின் அடிப்படையில் ஹுஜைர் பின் அபூ ஈஹாப் தமீமி என்பவன் வாங்கிக் கொண்டான். இவர் ஹாரிஸ் உடைய சந்ததிகள் வழி வந்தவனாவான். இவனிடமிருந்து ஹாரிஸ் உடைய மகன் உக்பா ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களை வாங்கிக் கொண்டார். அதன் மூலமாக தன் தந்தையுடைய கொலைக்கு பழிவாங்க வேண்டும் என்பதற்காக உக்பா பின் ஹாரிஸ் ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களை பனூ நஜ்ஜாரிடமிருந்து வாங்கியதாகவும் கூறப்படுகிறது. அபூ ஈஹாப், இக்ரிமா பின் அபூ ஜஹ்ல்,அகன்னஸ் பின் ஷரீக் உபைதா

பின் ஹக்கீம், உமையா பின் அபூ உத்பா ,ஹஸ்ரமீ உடைய மகன்களும் ஸஃப்வான் பின் உமையாவும் சேர்ந்து ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களை வாங்கியதாகவும் கூறப்படுகிறது. இவர்கள் அனைவரும் யார் என்றால், இவர்களுடைய மூதாதையர்கள் பத்ர் போரில் கொல்லப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களை விலைக்கு வாங்கி உக்பா பின் ஹாரிஸ்-க்கு கொடுத்து விட்டார்கள். அவர் இவர்களை தமது வீட்டில் சிறையில் வைத்திருந்தார்.

இப்னு ஹிஷாம் கூறுகிறார்: அம்மக்கள் இவர்கள் இருவரையும் அதாவது, ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஸைத் பின் தஸ்னா (ரலி) ஆகியோரை மக்காவில் இருந்த ஹுஸைல் கைதிகளுக்கு பதிலாக விற்றார்கள். ஹஸ்ரத் ஸைத் (ரலி) அவர்கள் ஒரு குறிப்பிட்ட தங்க எடைக்கு பதிலாக விற்கப்பட்டார்கள் என்றும் கூறப்படுகிறது. 50 ஒட்டகங்களுக்கு பதிலாக விற்கப்பட்டார்கள் என்றும் கூறப்படுகிறது. ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களும் 50 ஒட்டகங்களுக்கு பகரமாக விற்கப்பட்டதாக கூறப்படுகின்றது. சில அறிவிப்புகளின்படி ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள் 100 ஒட்டகங்களுக்கு பதிலாகவும், இன்னோர் அறிவிப்பின்படி 80 எடை தங்கத்திற்கு பகரமாக விற்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. குறைஷியர்களில் சில மக்கள் இணைந்து இந்த இருவரையும் அதாவது ஹஸ்ரத் குபைப் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸைத் பின் தஸ்னா (ரலி) ஆகியோரை வாங்கிக் கொண்டு தடுக்கப்பட்ட மாதம் கடந்து விட்டது என்றும் கூறப்படுகிறது.கடந்த குத்பாவில் நான் தடுக்கப்பட்ட மாதங்களை குறித்த விஷயங்களை விளக்கமாக எடுத்துக் கூறிவிட்டேன். இப்னு இஸ்ஹாக் மற்றும் இப்னு ஸஃது ஆகியோர் கூறும்போது, ஹஸ்ரத் ஸைத் (ரலி) அவர்களை ஸஃப்வான் பின் உமையா வாங்கிக் கொண்டார். அதன் மூலமாக அவர் தமது தந்தை உமையாவின் கொலைக்குப் பதிலாக கொலை செய்ய வேண்டும் என்று விரும்பினார். ஸஃப்வான் பிறகு முஸ்லிமாகிவிட்டார். அவர் அவர்களை பனூ ஜமஹ்வுடைய மக்களிடத்தில் கைதியாக வைத்திருந்தார் என்று கூறியிருக்கின்றார்கள். மேலும் தனது அடிமை நிஸ்தாஸ் .இடம் வைத்திருந்ததாகவும் கூறப்படுகின்றது.

ஆகவே தடுக்கப்பட்ட மாதம் கடந்து விட்டபோது ஸஃப்வான் தனது அடிமையான நிஸ்தாஸை தன்யீமை நோக்கி அனுப்பி வைத்தார். தன்யீம் என்பது மக்காவிலிருந்து மதீனா மற்றும் சிரியா செல்லும் திசையில் மூன்று அல்லது நான்கு மைல் தொலைவில் இருக்கக் கூடிய ஓர் இடமாகும். எவ்வாறு இருப்பினும், அவர்களை கொலை செய்ய வேண்டும் என்று ஹரம் பகுதியை விட்டு வெளியே கொண்டு சென்றார். அங்கு குறைஷியர்களின் ஒரு கூட்டமும் கூடி இருந்தது. அவர்களில் அபூ ஸுஃப்யான் பின் ஹரபும் இருந்தார். கொல்லப்படுவதற்காக அவர்கள் கொண்டு வரப்பட்ட போது அபூ ஸுஃப்யானைப் பார்த்து, ஸைதே அல்லாஹ்வின் மீது ஆணையாக, உமக்கு பதிலாக எங்களிடத்தில் முஹம்மது இருந்து, நாங்கள் அவர்களின் தலையை வெட்டி வீழ்த்தும் போது, நீர் உமது மனைவி மக்களுடன் இருப்பதை விரும்பமாட்டீரா? என்று கேட்டார்.

ஹஸ்ரத் ஸைத் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் எனது மனைவி மக்களுடன் இருக்கும்போது முஹம்மது (ஸல்) அவர்கள் தற்போது எந்த வீட்டில் இருக்கிறார்களோ அங்கு அவர்களுக்கு முள் குத்தி அது அவர்களுக்கு துன்பம் கொடுப்பதை கூட நான் விரும்ப மாட்டேன் என்று கூறினார்கள். இதைக் கேட்டு அபூ ஸுஃப்யான், முஹம்மது (ஸல்) உடைய தோழர்கள் முஹம்மது (ஸல்) அவர்களை எந்த அளவு நேசிக்கிறார்களோ அதே போன்று மக்களில் எந்த ஒரு நபரும் பிறரை நேசித்ததாக நான் கண்டதில்லை என்று கூறினார். பிறகு ஸைது (ரலி) அவர்களை நிஸ்தாஸ் கொன்று விட்டார். இன்னோர் அறிவிப்பில், அவருடன் சேர்ந்து கொண்டு குறைஷியர்கள் சிலர் ஈட்டி எறிய ஆரம்பித்தனர்; எந்த அளவுக்கென்றால் அவர்கள் ஷஹீத் ஆகிவிட்டார்கள் என்று வருகிறது.

பிற்காலத்தில் இந்த நிஸ்தாஸ் என்ற இந்த கொலையாளி முஸ்லிமாகவும் ஆகிவிட்டார்.

இப்னு உக்பா கூறுகிறார்: இருவரும் ஒரே நாளில் ஷஹீதாக்கப்பட்டார்கள். எந்த நாளில் இருவரும் ஷஹீதாக்கப்பட்டார்களோ அந்நாளில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கூறப்பட்டபோது அன்னார் (ஸல்) வ அலைக்குமுஸ்ஸலாம் என்று கூறிக் கொண்டிருந்தார்கள். இந்த சம்பவத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஸஃப்வான் பின் உமையா தமது கைதியான ஸைத் பின் தஸ்னா (ரலி) அவர்களை உடன் அழைத்துக் கொண்டு ஹரம் பகுதியை விட்டு வெளியே சென்றார். குறைஷிய தலைவர்களின் ஒரு கூட்டமும் உடன் சென்றது. வெளியே சென்றடைந்தவுடன் ஸஃப்வான் தனது அடிமையான நிஸ்தாசிடம் ஸைத் அவர்களை கொன்று விடுமாறு கட்டளையிட்டார். நிஸ்தாஸ் முன்னேறிச் சென்று வாளை உயர்த்திய போது அப்போது அபூ ஸுஃப்யான் பின் ஹரப் என்ற மக்கத்து தலைவரும் இக்காட்சியை காண்பதற்காக வந்திருந்தார். அவர் முன்னால் வந்த ஸைத் (ரலி) அவர்களிடம் இந்நேரத்தில் உமக்கு பதிலாக எங்களுடைய கைகளில் முஹம்மத் (ஸல்) அவர்கள் இருந்து, நாங்கள் அவரை கொலை செய்திருந்தால் நீ உயிர் தப்பி உமது மனைவி மக்களுடன் மகிழ்ச்சியாக நாட்களை கழித்துக் கொண்டிருந்தால் அது எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். இவ்வாறு உமது உள்ளம் விரும்பவில்லையா? என்று உண்மையாக கூறு என்று கேட்டார். இதைக் கேட்டவுடன் ஸைதுடைய கண்களில் கோபம் பொங்கியது. அவர் கோபத்துடன், அபூ ஸுஃப்யானே! நீ என்ன கூறுகிறாய்? இறைவன் மீது ஆணையாக! நான் உயிர் தப்பிப்பதற்கு பதிலாக ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கால்களில் ஒரு முள்குத்துவதை கூட நான் விரும்பமாட்டேன் என்று கூறினார். இதைக் கேட்டவுடன், அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மத் (ஸல்) அவர்களின் தோழர்கள் அவர்களை எந்த அளவு நேசிக்கிறார்களோ அதே போன்று வேறு எவரும் பிறரை நேசித்ததாக நான் கண்டதில்லை என்று அபூ ஸுஃப்யான் தன்னையுமறியாமல் கூறினார். அதற்கு பிறகு நிஸ்தாஸ் ஸைத் -ஐ கொன்று விட்டான்.

இந்த கொலை சம்பவத்தை குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

அக்காட்சியை காண்பதற்காக வந்திருந்தவர்களுள் அபூ ஸுஃப்யான் என்ற மக்கத்து தலைவரும் இருந்தார். அவர் ஸைத் (ரலி) அவர்களை பார்த்து, உம் இடத்தில் முஹம்மது இருந்து, நீ உமது வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதை நீ விரும்ப மாட்டீரா? என்று கேட்டார். ஸைத் (ரலி) அவர்கள் மிகவும் கோபத்துடன், அபூ ஸுஃப்யானே! நீர் என்ன கூறுகின்றீர்? இறைவன் மீது ஆணையாக! பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மதீனாவின் தெருக்களில் ஒரு முள் குத்துவதை விட நான் இறப்பது எவ்வளவோ சிறந்தது என்று கூறினார். இந்த அர்ப்பணிப்பை கண்டு, அபூஸுஃப்யானால் தாக்கத்திற்கு உள்ளாகாமல் இருக்க முடியவில்லை. அவர் மிகவும் வியப்போடு ஸைத் (ரலி) அவர்களை பார்த்து மெல்லிய குரலில், இறைவன் சாட்சியாக இருக்கின்றான். முஹம்மத் (ஸல்) உடைய தோழர்கள் முஹம்மது (ஸல்) அவர்களை நேசிப்பது போல் வேறு எவரும் பிறரை நேசித்ததாக நான் கண்டதில்லை என்று கூறினார்.

ஒரு வாழ்க்கை வரலாற்றாசிரியர் ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவத்தை பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு எழுதுகிறார்:

ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள் ஹுஜைர் பின் ஈஹப் அவர்களிக் சிறைக் காவலில் இருந்தார். மேலும் ஹாரிஸ் பின் நவ்ஃபல் உடைய மகன்களுடைய வீட்டில் வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் கொடுமை செய்யப்பட்டார்கள். அவர்களின் இந்த நடைமுறையை கண்ட ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள் எந்த ஒரு கண்ணியத்திற்குரிய சமுதாயமும் தனது கைதியுடன் இவ்வாறு நடந்து கொள்ளாது என்று கூறினார்கள்.

எவ்வாறு இருப்பினும், காஃபிர்களுடைய உள்ளத்தில் அதன் பெரும் தாக்கம் ஏற்பட்டது. அதற்கு பிறகு அவர்கள் அவருடன் நல்ல முறையில் நடந்து கொள்ள ஆரம்பித்தனர். இப்னு ஷிஹாப் கூறுகிறார்: உபைதுல்லாஹ் பின் அயாஸ் அவர்கள் எனக்கு இதை கூறினார்கள். ஹாரிஸ் உடைய மகள் அவர்களிடம் இதை கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களை கொல்ல வேண்டும் என்று காஃபிர்கள் தீர்மானித்த போது குபைப் (ரலி) அவர்கள் தம் உபயோகத்திற்காக அவளிடம் சவரக்கத்தி கேட்டார்கள். ஆகவே, அவள் சவரக்கத்தியை கொடுத்து விட்டாள். ஹாரிஸ் உடைய மகள் கூறுகிறார்:

அப்போது நான் கவனமற்று இருக்கும்போது எனது ஒரு குழந்தை குபைபுக்கு அருகில் சென்று விட்டது. அவர் அந்த குழந்தையை தூக்கி வைத்துக் கொண்டார்.நான் குபைபை பார்த்த போது, அவர் குழந்தையை தமது மடியில் அமர்த்தி இருந்தார்; அவருடைய கையில் சவரக்கத்தி இருந்தது. நான் இக்காட்சியை கண்ட போது மிகுந்த அச்சத்திற்கு உள்ளாகினேன். குபைப் (ரலி) அவர்கள் எனது பதற்றத்தை எனது முகத்தைக் கண்டு அறிந்து கொண்டார்கள்.



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

நான் இக்குழந்தையை கொன்று விடுவேன் என்று நீ அஞ்சுகிறாயா? நான் அவ்வாறு செய்யக் கூடியவன் கிடையாது; முஸ்லிம்கள் வாக்குறுதியை பேணக் கூடியவர்கள் ஆவோம்; அநீதி செய்ய மாட்டோம் என்று கூறினார்கள். இறைவன் மீது ஆணையாக!, குபைப் (ரலி) அவர்களை விட மிகச் சிறந்த கைதியை நான் கண்டதே கிடையாது என்று ஹாரிஸ் உடைய மகள் கூறி வந்தார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் ஒருநாள் அவருடைய கையில் திராட்சைக் கொத்தைக் கண்டேன். அதை அவர் உண்டு கொண்டிருந்தார். அப்போது அவர் இரும்பு சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தார். அந்நாட்களில் மக்காவில் எந்த ஒரு பழவகையும் கிடையாது. இது அல்லாஹ்வின் சார்பாக அவருக்கு வழங்கப்பட்ட ரிஸ்க் ஆகும் என்று அப்பெண்மணி கூறிவந்தார்.

குறைஷியர்கள் அவரை ஹரம் பகுதியை விட்டு வெளியே கொண்டு சென்றார்கள். ஹரம் இல்லாத பகுதியில் வைத்து அவரை கொலை செய்வதற்காக கொண்டு சென்றார்கள். அப்போது குபைப் (ரலி) அவர்கள் அம்மக்களிடம் இரண்டு ரக்அத்துகள் தொழுவதற்கு அனுமதி கேட்டார்கள். அவர்கள் அவருக்கு அனுமதி கொடுத்தனர். இரண்டு ரக்அத்துகள் தொழுது முடித்தார்கள். நான் பதற்றமடைந்து தொழுகிறேன் என்று நீங்கள் நினைத்து விடக் கூடாது என்பதற்காகத்தான் நான் நீண்ட தொழுகையாக தொழுவில்லை. இல்லையெனில் நீண்ட தொழுகையாக தொழுதிருப்பேன் என்று கூறினார்கள். அதாவது நான் தப்பிப்பதற்காக நீண்ட தொழுகையாக தொழுகிறேன் என்று நீங்கள் கருதி விடக் கூடாது. எனவே தான் நீண்ட தொழுகையாக தொழாமல் சுருக்கமாக தொழுது கொண்டேன். நான் மரணத்தை விட்டு தப்பிப்பதற்காக ஒருவேளை பதற்றமடைந்து தொழுகையை நீட்டிக்கின்றேனோ என்று நீங்கள் என்னை எண்ணி விடக் கூடாது. நான் இதற்காகத்தான் நீண்ட தொழுகையாக தொழுகிறேன் என்று நீங்கள் நினைத்து விடக் கூடாதே என்ற எண்ணம் எனது உள்ளத்தில் எழாமல் இருந்திருந்தால் நான் எந்த அளவு நீண்ட தொழுகையாக தொழுதிருப்பேன் என்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள் என்றார்கள்.

எவ்வாறு இருப்பினும், அவர்கள் அதற்கு பிறகு தம் இறைவனிடம், அல்லாஹ்வே, இவர்கள் ஒவ்வொருவரையும் நீ அழித்து விடுவாயாக! என்று துஆ செய்தார்கள். அதாவது எதிரிகளுக்கு எதிராக துஆ செய்தார்கள். அதற்குப் பிறகு அவர்கள் கவிதை வரிகளையும் வாசித்தார்கள். அது என்னவென்றால், நான் முஸ்லிமாக இருக்கின்ற நிலையில் கொல்லப்படுகின்றேன். ஆகவே நான் வெட்டுண்டு எந்த திசையில் விழுவேன் என்பதை பற்றி எனக்கு கவலை இல்லை. நான் வெட்டுண்டு விழுவது அல்லாஹ்வுக்காகவே ஆகும். அவன் விரும்பினால் துண்டாக்கப்படும் போது எனது உடல் உறுப்புகளிலும் பரக்கத்தை வழங்கி விடுவான்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள் கைதியாக இருந்த சம்பவத்தை இவ்வாறு எடுத்துக் கூறுகிறார்கள்:

இப்போது இந்த இரு ஸஹாபிகளும் குறைஷியர்களிடத்தில் அடிமையாக கைதியாக இருந்தார்கள். ஒருநாள் குபைப் (ரலி) அவர்கள் ஹாரிஸ் உடைய ஒரு மகளிடம் தம் தேவைக்காக ஒரு சவரக்கத்தியை கேட்டார்கள். அவள் அதை கொடுத்து விட்டாள். அந்த சவரக்கத்தி குபைப் (ரலி) அவர்களுடைய கையில் இருக்கும் போது ஹாரிஸ் உடைய மகளுடைய ஒரு சிறு குழந்தை விளையாடிக் கொண்டே குபைப் (ரலி) அவர்களுக்கு அருகில் சென்று விட்டது. குபைப் (ரலி) அவர்கள் அக்குழந்தையை தம் மடியில் அமர்த்திக் கொண்டார்கள். குபைப் (ரலி) அவர்களின் கையில் சவரக் கத்தியும் அவருடைய மடியில் தம் குழந்தையும் இருப்பதைக் கண்ட தாய் நடுங்கி விட்டாள். அவளுடைய முகம் மாறிவிட்டது. குபைப் (ரலி) அவர்கள் அவளை கண்ட போது, அவருடைய அச்சத்தை புரிந்தவாறு நான் இக்குழந்தையை கொலை செய்து விடுவேன் என்று நீ நினைக்கிறாயா? அவ்வாறு நினைக்க வேண்டாம். இன்ஷா அல்லாஹ் நான் அவ்வாறு செய்ய மாட்டேன் என்று கூறினார்கள். குபைப் (ரலி) அவர்களின் இந்த வார்த்தைகளினால் அந்த தாயுடைய வாடிய முகம் மலர்ந்து விட்டது. குபைப் (ரலி) அவர்களுடைய உயரிய நல்லொழுக்கத்தினால் இப்பெண் எந்த அளவு தாக்கத்திற்கு உள்ளானார் என்றால் அவர் பிற்காலத்தில் அவரைப் பற்றி கூறும் போதுதெல்லாம் நான் குபைப்- ஐ போன்ற நல்ல கைதியை கண்டதே கிடையாது என்று கூறி வந்தார்.

நான் ஒருமுறை குபைப் (ரலி) அவர்களுடைய கையில் ஒரு திராட்சை கொத்தை கண்டேன். அதிலிருந்து அவர் திராட்சை பழத்தை எடுத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அந்நாட்களில் மக்காவில் திராட்சை பழத்துடைய சுவடு கூட கிடையாது. அப்போது குபைப் (ரலி) அவர்கள் இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு இருந்தார்கள். அது இறைவனுடைய ரிஸ்க்காக இருந்தது. அது குபைப் (ரலி) அவர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்ததாக நான் உணர்கிறேன் என்றும் அப்பெண்மணி கூறி வந்தார்.

ஹஸ்ரத் குபைப் பின் அதீ (ரலி) அவர்களின் கைது செய்யப்பட்டிருந்த சம்பவம் இன்னோர் அறிவிப்பில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: முஆவியா என்பவர் ஹுஜைர் பின் ஈஹாப் ஆல் விடுதலை செய்யப்பட்ட பெண் அடிமையாக இருந்தார். மக்காவில் அவருடைய வீட்டில் தான் ஹஸ்ரத் குபைப் பின் அதீ (ரலி) அவர்கள் கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்தார்கள். தடுக்கப்பட்ட மாதங்கள் கடந்த உடன் அவர்கள் கொல்லப்பட வேண்டும் என்பதற்காக. முஆவியா என்ற அந்தப் பெண் பிற்காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். அவர் நல்ல முஸ்லிமாகவும் நிரூபணமானார். பிற்காலத்தில் அந்தப் பெண் இந்த சம்பவத்தை எடுத்துரைக்கும் போது, அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் குபைப் (ரலி) அவர்களை விட மிகச் சிறந்த நபரை கண்டதில்லை. நான் அவர்களை கதவின் இடுக்கு வழியாக கண்டு வந்தேன். அவர் இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தார். அப்போது பூமி முழுவதிலும் திராட்சை பழங்களில் ஒன்று கூட கிடையாது. அதாவது அப்பகுதியில் ஒரு திராட்சைப் பழம் கூட கிடையாது. ஆனால், குபைப் (ரலி) அவர்களின் கையில் ஒரு மனித தலை அளவுக்கு திராட்சை கொத்து இருந்தது. அதாவது மிகப் பெரிய கொத்தாக அது இருந்தது. இது ஓரிரு முறை கண்ட சம்பவம் கிடையாது. மாறாக பலமுறை நான் இதைக் கண்டுள்ளேன். அதை அவர்கள் உண்டு வந்தார்கள். அது அல்லாஹ்வுடைய ரிஸ்க் அன்றி வேறு ஒன்றும் கிடையாது என்று அப்பெண்மணி கூறிவந்தார்.

ஹஸ்ரத் குபைப் பின் அதீ (ரலி) அவர்கள் தஹஜ்ஜுதில் திருக்குர்ஆன் ஓதுவார்கள். அதைக் கேட்டு விட்டு பெண்கள் அழுவார்கள். அவர்களுக்கு குபைப் (ரலி) மீது கருணை பிறக்கும். அப்பெண்மணி கூறுகின்றார்: ஒருநாள் நான் ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களிடம், உங்களுக்கு ஏதேனும் தேவை உள்ளதா? என்று கேட்டேன். அவர் இல்லை என்று கூறினார். பிறகு, எனக்கு குளிர்ந்த நீர் வேண்டும் என்று கேட்டார். சிலைகளின் பெயரால் அறுக்கப்பட்ட இறைச்சியை எனக்கு ஒருபோதும் கொடுக்க வேண்டாம் என்றும் கூறினார். சிலைகளின் பெயரால் அறுக்கப்பட்ட அந்த உணவை எனக்கு தர வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். மூன்றாவது விஷயம், மக்கள் என்னை கொலை செய்வதற்கு தீர்மானிக்கும் போது என்னிடம் கூறி விட வேண்டும் என்று கூறினார். தடுக்கப்பட்ட மாதங்கள் கடந்த போது குபைப் (ரலி)அவர்களை கொலை செய்யலாம் என்று மக்கள் தீர்மானித்த போது நான் அவரிடம் சென்று இந்த செய்தியை கூறினேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர் தாம் கொல்லப்படுவதை குறித்து கொஞ்சம் கூட அக்கறை கொள்ளவில்லை. அவர் என்னிடம் எனக்கு சவரக்கத்தி அனுப்பி வை; நான் என்னை சீர்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டார். நான் எனது மகன் அபூ ஹஸன் உடைய கையில் சவரக்கத்தி கொடுத்து அனுப்பினேன். அறிவிப்பாளர் கூறுகின்றார்: அது அவருடைய உண்மையான மகன் கிடையாது; மாறாக மாவியா அந்த குழந்தையை வளர்த்து வந்தாள்.

எவ்வாறு இருப்பினும், அந்த குழந்தை அருகில் சென்று விட்ட போது, அல்லாஹ்வின் மீது ஆணையாக! குபைப் (ரலி) பழிதீர்த்துக் கொள்வார் என்ற எண்ணம் எனது உள்ளத்தில் தோன்றியது என்று அவர் கூறுகிறார். மேலும் அவர் கூறுகிறார்:

இப்போது எனது மகன் அவருக்கு அருகில் உள்ளான். அவரிடம் சவரக்கத்தி உள்ளது. அவரோ பழிவாங்கி விடுவார்.நான் என்ன செய்து விட்டேன்? நான் அக்குழந்தையின் கையில் சவரக்கத்தியை அனுப்பிவிட்டேனே. குபைப் (ரலி) அவர்கள் கத்தியால் குழந்தையை கொன்றுவிட்டு, ஆணுக்கு பதிலாக ஆண்; நான் பழிவாங்கிவிட்டேன் என்று கூறுவாரோ என்று நான் எண்ணினேன். எனது மகன் அவரிடத்தில் அக்கத்தியை கொண்டு சேர்த்த போது, அவர் அதை வாங்கும்போது, நீ பெரிய வீரனாக இருக்கிறாயே? நான் துரோகம் செய்து விடுவேன் என்ற அச்சம் உம் தாயாருக்கு அச்சம் இல்லையா? உனது கையில் எனக்கு சவரக்கத்தியை கொடுத்து அனுப்பியிருக்கின்றாளே? மக்களோ என்னை கொலை செய்வதற்கு எண்ணம் கொண்டு விட்ட பிறகு இவ்வாறு சவரக்கத்தியை கொடுத்து அனுப்பி இருக்கிறாளே என்று அவர் நகைப்பாக அந்த குழந்தையிடம் கூறினார். மாவியா கூறுகிறார்: இந்த பேச்சுகளை நான் கேட்டுக் கொண்டிருந்தேன். நான் அவரிடம், அல்லாஹ்வின் மீது கொண்ட நம்பிக்கையின் அடிப்படையில் நான் உங்களிடம் அச்சமின்றி இருந்தேன். நான் உங்களுடைய இறைவனின் மீது நம்பிக்கை கொண்டு இந்த குழந்தையுடைய

கையில் உங்களுக்காக சவரக்கத்தியை கொடுத்து அனுப்பியுள்ளேன். நீங்கள் அதைக் கொண்டு எனது மகனை கொல்ல வேண்டும் என்பதற்காக நான் கொடுக்கவில்லை என்று கூறினேன். அதை கேட்டு அவர்கள் நான் அவ்வாறு செய்ய மாட்டேன். இக்குழந்தையை நான் கொலை செய்ய மாட்டேன். நாங்கள் எங்களது மார்க்கத்தில் துரோகத்தை ஆகுமானதாக கருதுவதில்லை என்று கூறினார்கள். அப்பெண்மணி கூறுகிறார்: பிறகு நான் குபைப் (ரலி) அவர்களிடத்தில் மக்கள் நாளை காலையில் உங்களை இங்கிருந்து கொலை செய்வதற்காக அழைத்துச் செல்வார்கள் என்று கூறினேன். அடுத்த நாள் மக்கள் அவர்களை சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்த நிலையில் தன்யீம் என்ற இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். ஏற்கனவே கூறப்பட்டது போன்று இது மக்காவுக்கு அருகில் மூன்று மைல் தொலைவில் இருந்த இடமாகும்.

குபைப் (ரலி) அவர்கள் கொல்லப்படுகின்ற காட்சியை காண்பதற்காக குழந்தைகளும், பெண்களும், அடிமைகளும் மக்காவில் இருந்து பல மக்களும் அங்கு வந்திருந்தார்கள். பழிவாங்க வேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்த ஒவ்வொருவரும் அவரை காண்பதற்காக சென்றிருந்தார்கள். அவர்கள் தங்களது கண்களை குளிரச் செய்வதற்காக அங்கு சென்று இருந்தார்கள். எவர்கள் பழிவாங்கும் எண்ணம் கொண்டிருக்கவில்லையோ இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரிகளாக இருந்தார்களோ அவர்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்காகவும் மகிழ்ச்சி அடைவதற்காகவும் அங்கு சென்றிருந்தார்கள். எவ்வாறு இவர் கொலை செய்யப்படுகின்றார் என்பதை காண்பதற்காக சென்றிருந்தார்கள். ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களை ஸைத் பின் தஸ்னா அவர்களுடன் தன்யீம் என்ற இடத்திற்கு சென்ற பிறகு இணை வைப்பாளர்களுடைய கட்டளையினால் அங்கு நீண்ட மரக்கட்டை மண்ணில் நடப்பட்டது. அவர்கள் ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களை இந்த மரக்கட்டைக்கு அருகில் கொண்டு சென்று நிறுத்தினார்கள். அப்போது ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள் இரண்டு ரக்அத்துகள் தொழுவதற்கு எனக்கு அவகாசம் கிடைக்குமா? என்று கேட்டார்கள். ஆம் என்று மக்கள் கூறினர். அதனை நீட்டித்து தொழவில்லை. நான் ஏற்கனவே கூறியது போன்று மரணத்தை விட்டு தப்பிப்பதற்காக தொழுகிறேன் என்று மக்கள் நினைத்து விடக் கூடாது என்பதற்காக சுருக்கமாக தொழுது கொண்டார்கள்.

இப்னு ஸஃதுடைய சான்றின் அடிப்படையில் தற்போது கூறப்பட்ட அறிவிப்புக்கிணங்க மாவியா என்ற பெண்மணி ஹுஜைர் பின் அபூ ஈஹாப் -ஆல் விடுதலை செய்யப்பட்ட பெண் அடிமையாக இருந்தார்கள். அவர்களுடைய வீட்டில் ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள் கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்தார்கள். அல்லாமா இப்னு அப்துல் பர் அவர்களுடைய கூற்றுக்கிணங்க ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள் உக்பா உடைய வீட்டில் கைதியாக இருந்தார்கள். உக்பாவுடைய மனைவி அவர்களுக்கு உணவு கொடுத்தார்கள். உணவு நேரத்தில் அவர்களை திறந்து விட்டு விடுவார்கள்.

எவ்வாறு இருப்பினும், இவை இம்மக்களுடைய தியாகங்களாக இருந்தன. மரணத்தை பற்றி அச்சமற்ற நிலையாக இருந்தது. இஸ்லாத்திற்காக உயிரை கொடுப்பதற்கு எல்லா நேரமும் இந்த ஸஹாபிகள் ஆயத்தமாக இருந்தனர். இந்த போர் சம்பவத்தைப் பற்றிய குறிப்புகள் இன்னும் உள்ளன. எதிர் வரும் நாட்களில் எடுத்துக் கூறுவேன். இன்ஷா அல்லாஹ் !

தமிழாக்கம்

மவ்லவி APA. தாரிக் அஹ்மத்

* * * * * * *

**16ம் பக்கத் தொடர்ச்சி.....**
**(ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜெர்மன் சுற்றுப் பயணம் அறிக்கை)**

சமுதாயத்திலும் எல்லாரையும் விட அதிக நன்றியுணர்வு கொண்ட

குடிமக்களாக இருக்கின்றனர். நான் எவ்வித சந்தேகமும், ஐயமும் இன்றி இந்த விஷயத்தைக் கூறுகின்றேன்; எங்களது ஜமாஅத்தின் ஒரு பெரும்பான்மையான மக்களிடத்தில் இந்த சிறப்பு காணப்படுகின்றது. இதே சிறப்புகளின் காரணமாக அஹ்மதி முஸ்லிம்கள் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு ஹிஜ்ரத் செய்து செல்கின்ற போது அவர்கள் அங்குள்ள சமூகத்தின் அங்கமாக மாறுவதில் அவர்கள் சங்கடங்களுக்கு ஆளாகுவதில்லை. அதாவது எந்த நாடுகளில் அவர்கள் குடியேறுகின்றார்களோ அந்த நாடுகளின் பரந்துப்பட்ட சமுதாய நலனுக்காக தமது பங்களிப்பை எவ்வாறு செலுத்துவது என்று அவர்கள் நெருடல்களுக்கு ஆளாகுவதில்லை. அஹ்மதிகள் எந்த நாட்டிற்கும் சென்றாலும் ஓர் உண்மையான குடிமகனுக்கு எந்த அளவிற்கு நாட்டுப்பற்று கடமையாக இருக்கின்றதோ அந்த அளவிற்கு அவர்கள் தமது நாட்டுப் பற்றை வெளிப்படுத்துகின்றனர். மேலும் தமது வாழ்க்கையை தமது நாட்டின் மேன்மை மற்றும் முன்னேற்றத்திற்கான காரணிகளை தேடுவதில் ஈடுபடுத்திக் கொள்கின்றார்கள்.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: தமது வாழ்வை எவ்வாறு கழிக்க வேண்டும்? என்று நமக்கு கற்றுக் கொடுப்பது இஸ்லாம் மார்க்கம் மட்டுமே ஆகும். மேலும், நிச்சயமாக இந்த மார்க்கம் மேலோட்டமான கட்டளையை எங்களுக்கு வழங்கவில்லை. மாறாக, நீங்கள் வசித்து வரும் நாட்டுடன் முழுமையான ரீதியில் நன்றியுணர்வு மிக்கவர்களாகவும், உயிரை அர்ப்பணிக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் என்று இஸ்லாம் நமக்கு கட்டளை வழங்குகின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் தெளிவாக இந்த விஷயத்தை வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்: அதாவது, நாட்டுப்பற்று ஒவ்வொரு உண்மையான முஸ்லிமுடைய ஈமானின் அங்கமாகும். தமது நாட்டின் மீது நேசம் கொள்வது இஸ்லாத்தின் அடிப்படை போதனையாக இருக்கும் போது, பின்னர் எவ்வாறு ஓர் உண்மையான முஸ்லிம் தமது நாட்டிற்கு நன்றிகேடும், நம்பிக்கை துரோகமும் செய்ய முடியும்? மேலும், அவ்வாறு செய்தால் அவர் தமது ஈமானை புறக்கணித்தவர் ஆகிவிடுவார். அஹ்மதிகளை பொறுத்த வரை தமது அனைத்து கூட்டங்களிலும், அனைத்து ஜமாஅத்துகளும், அவர்கள் ஆண்களாக இருந்தாலும் சரி; பெண்களாக இருந்தாலும் சரி; குழந்தைகளாக இருந்தாலும் சரி; அல்லது முதியவர்களாக இருந்தாலும் சரி; அவர்கள் எழுந்து நின்று தங்களது இறைவனை சாட்சியாக வைத்து ஓர் உடன்படிக்கை எடுக்கின்றனர். அந்த உடன்படிக்கையில் அவர்கள் இவ்வாறு உறுதிகொடுக்கின்றனர். அதாவது, நாங்கள் எங்களது மார்க்கத்திற்காக மட்டுமல்ல. மாறாக, எங்களது சமுதாயத்திற்காகவும், நாட்டிற்காகவும் நாங்கள் எங்களது உயிரையும், செல்வத்தையும், தியாகம் செய்வோம் என்று உறுதிமொழி கொடுக்கின்றனர். எனவே இந்த மக்களைக் காட்டிலும் அதிக நன்றியுணர்விற்கான வாதம் செய்யக் கூடிய மக்கள் வேறு எவர்கள் இருக்க முடியும்? அவர்களுக்கு தமது நாட்டிற்கு தொண்டாற்றும்படி தொடர்ந்து நினைவூட்டல் வழங்கப்படுகின்றது. மேலும், நாங்கள் எங்களது ஈமான் மற்றும் தேசத்திற்காக எல்லா விஷயங்களையும் தியாகம் செய்வதற்கு எப்போதும் தயாராக இருப்போம் என்ற உறுதிமொழி அவர்களிடமிருந்து மீண்டும் மீண்டும் பெறப்படுகின்றது.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: மக்களின் எண்ணங்களில் இந்த ஒரு கேள்வி எழக்கூடும். அது என்னவென்றால், ஜெர்மனியில் முஸ்லிம்களின் பெரும்பாலார் பாகிஸ்தான், துருக்கி மற்றும் இதர ஆசிய நாடுகளிலிருந்து வருகின்றனர். எனவே தமது நாட்டிற்காக தியாகம் செய்வதற்கான தருணம் வரும்போது அவர்கள் ஜெர்மனியைக் காட்டிலும் தங்களது நாடுகளுக்கே முன்னுரிமை வழங்குவர்?

எனவே நான் இதனை தெளிவுபடுத்துகின்றேன். அதாவது இதனை புரிய வைத்து விடுகின்றேன். அதாவது, ஒருவர் ஜெர்மன் நேஷனாலிட்டி பெறுகின்றார் என்றால் அல்லது எந்தவொரு நாட்டினுடைய நேஷனாலிட்டியையும் பெறுகின்ற போது அந்நிலையில் அவர் அந்த நாட்டின் முழுமையான குடிமகனாக ஆகிவிடுகின்றார்.

(தொடரும்......)

தமிழாக்கம்

மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * *

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

**ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின்**
**ஐரோப்பிய சுற்றுப் பயணம் - ஜெர்மனி**
**2012 டிசம்பர்**

**அறிக்கை : அப்துல் மாஜித் ஸாஹிப் தாஹிர் - அடிஷனல் வகீலுத் தப்ஷீர் லண்டன்**

**டிசம்பர் 05 - புதன்கிழமை 2012**

காலை ஏழு மணிக்கு ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஓஸ்னாபர்க் மஸ்ஜித் பஷாரத் பள்ளிவாசலிற்கு வருகை தந்து ஃபஜ்ர் தொழுகையை தொழ வைத்தார்கள். தொழுகையை முடித்த பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) ஜமாஅத் உறுப்பினர்களுக்கு மத்தியில் சென்றார்கள். மேலும் அஸைலம் பெறுவதற்காக வந்துள்ள நபர்களைக் குறித்து வினவினார்கள். ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பரிவு கூர்ந்து பல்வேறு நபர்களுடன் உரையாடினார்கள். மேலும், எப்போது வந்தீர்கள்? எங்கிருந்து வந்துள்ளீர்கள்? என்று வினவினார்கள். ஜமாஅத் சகோதரர்கள் ஒவ்வொருவராக தமது அறிமுகத்தை எடுத்துரைத்தவாறும், இங்கு அவர்களின் தங்குமிடம் தொடர்பாகவும் கூறினார்கள். அஸைலம் பெறக் கூடிய அந்த இளைஞர்களின் எண்ணிக்கை சுமார் 45 ஆக இருந்தது. மேலும் இவர்கள் அனைவரின் தங்குமிடமாக ஓஸ்னோபர்க் இருந்தது.

இதன் பிறகு எல்லாரும் வாருங்கள்; கை குலுக்கிக் கொள்ளுங்கள் என்று ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பரிவு கூர்ந்து கூறினார்கள். ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கை குலுக்கும் போது ஒவ்வொருவருக்கும் இந்த அறிவுரையைக் கூறினார்கள்: உங்களது அஸைலம் வழக்கில் உண்மையை கூற வேண்டும்; மேலும் எது சரியானதும், உண்மையான விஷயமாகவும் இருக்குமோ அதனைக் கூற வேண்டும். அதன் பிறகு ஜமாஅத்தின் ஏனைய உறுப்பினர்களுக்கும் தமது அன்பிற்குரிய எஜமானருடன் கை குலுக்கும் நற்பேறு கிடைத்தது. மேலும் ஒவ்ரியா ஜமாஅத்தின் ஒவ்வோர் உறுப்பினரும் இந்த அருளிலிருந்து பயன் பெற்றனர்.

**ஓஸ்னோபர்க்கிலிருந்து ஹம்பர்க் நோக்கி புறப்பாடு - பைத்துர் ரஷீத் ஹம்பர்க்கை சென்றடைதலும், உணர்வுப் பூர்வமான வரவேற்பும்**

இன்று நிகழ்ச்சி நிரலுக்கேற்ப ஓஸ்னோபர்க்-லிருந்து ஹம்பர்க் நகரத்திற்கு புறப்பட வேண்டியது இருந்தது. ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை இந்த பயணத்தில் வழியனுப்பி வைப்பதற்காக ஜமாஅத்தின் ஆண்களும், பெண்களும், சிறுவர்களும், சிறுமியர்களும் காலை முதலே மஸ்ஜிதின் வளாகத்தில் ஒன்று கூடத் துவங்கியிருந்தார்கள். கடுமையான குளிர் இருந்தது. இரவு பனிப் பொழிவும் நிகழ்ந்திருந்தது. இந்தக் கடுங் குளிரிலும் ஜமாஅத் உறுப்பினர்களான ஆண்களும், பெண்களும், சிறுவர்களும், சிறுமியர்களும், இளைஞர்களும், முதியவர்களும் மஸ்ஜிதின் திறந்த வெளி மைதானத்தில் தங்களது அன்பிற்குரிய எஜமானருக்கு அல்விதா கூறுவதற்காக நின்று கொண்டிருந்தனர்.

9.30 மணியளவில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது தங்குமிடத்தில் இருந்து வெளியில் வருகை தந்த போது சிறுவர்களும், சிறுமியர்களும் துஆக்கள் வடிவிலான கூட்டுப்பாடலை பாடியவாறு தங்களது அன்பிற்குரிய எஜமானரை பயணத்தில் வழியனுப்பி வைத்தார்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூட்டுத் துஆ செய்தார்கள். மேலும் கரத்தை உயர்த்தி அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினார்கள். மேலும் ஓஸ்னோபர்க் நகரத்திலிருந்து ஹம்பர்க் நகரத்தை நோக்கி புறப்பாடு நிகழ்ந்தது. ஓஸ்னோபரூக் நகரத்திலிருந்து ஹம்பர்க் நகரத்திற்கான தொலைவு சுமார் 239 கி.மீ ஆகும்.

சுமார் இரண்டு மணிநேரம் பயணம் மேற்கொண்டதற்கு பிறகு 11.45 மணியளவில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹம்பர்க் ஜமாஅத்தின் தலைமையகம் பைத்துர் ரஷீதிற்கு சென்றடந்தார்கள். ஹம்பர்க் மண்டலத்தில் உள்ள அனைத்து ஜமாஅத் உறுப்பினர்களும், ஆண்களும், பெண்களும் பெரும் எண்ணிக்கையில் தமது அன்பிற்குரிய எஜமானருக்கு நல்வரவு கூறுவதற்காக காலை முதலே பைத்துர் ரஷீதுடைய வெளிப்புற வளாகத்தில் ஒன்று குழுமியிருந்தார்கள். ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வாகனத்திலிருந்து வெளியில் வருகை தந்ததும் சிறுவர்கள் மற்றும் சிறுமியர்களின் குழுக்கள் நல்வரவு கூறி பாடலைப் பாடினார்கள். ஒவ்வொருவரும் தமது கரத்தை உயர்த்தி தனது அன்பிற்குரிய எஜமானரின் வரவு நல்வரவு ஆகட்டுமாக எனக் கூறிக் கொண்டிருந்தார். ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது கரத்தை உயர்த்தி அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினார்கள். ஹம்பர்க் ஜமாஅத்தின் உள்ளூர் அமீர் ஹம்பர்க் சவத்ரி ஸஹூர் அஹ்மத் ஸாஹிப் மற்றும் ஹம்பர்க் ஜமாஅத்தின் முரப்பி லயீக் அஹ்மத் முனீர் ஸாஹிப் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை வரவேற்றவாறு கைகுலுக்குவதற்கான நற்பேறு பெற்றார்கள்.

ஜெர்மனியின் ஸத்ர் லஜ்னா இமாயில்லாஹ் மற்றும் ஹம்பர்க் லஜ்னா இமாயில்லாஹ்வின் ஸத்ர் ஸாஹிபா ஆகியோரும் தமது பொறுப்பாளர்களுடன் ஹஸ்ரத் பேகம் ஸாஹிபா அவர்களுக்கு நல்வரவு கூறி வரவேற்றார்கள்.

ஹம்பர்க் ஜமாஅத்தின் சென்டர் பைத்துர் ரஷீதில் இருக்கும் முன்பகுதியில் ஒரு பெரும் மஹ்ராபி வாசலை அமையுங்கள் ; மேலும் அந்த வாசலுக்கு வலமும், இடமும் இரண்டு மினாராக்கள் நிலத்திலிருந்து எழுப்பி கட்டிடத்தின் கூரை வரை கொண்டு செல்லுங்கள்; மேலும் இவ்வாறு முறையாக இதற்கு மஸ்ஜிதிற்கான வடிவத்தை கொடுங்கள் என்று ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கடந்த வருடம் தமது ஜெர்மனி சுற்றுப் பயணத்தின் போது ஹம்பர்க் நகரத்திற்கு வருகை தந்திருந்த போது,, கூறியிருந்தார்கள்.

எனவே அல்லாஹ்வின் அருளினால் ஹம்பர்க் ஜமாஅத் தனது தலைமையக சென்டரான பைத்துர் ரஷீதை ஒரு மஹ்ராபி வாசலுடனும், இரண்டு மினாராக்களுடன் மஸ்ஜிதின் வடிவத்தில் மாற்றி விட்டது. மஹ்ராபி வாசலில் லாயிலாஹ இல்லல்லாஹ் ; முஹம்மத் ரஸூலுல்லாஹ் என்ற தூய கலிமாவை எழுதப்பட்டது.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்த மஹ்ராபைக் கொண்ட வாசலையும், மினாராவையும் கண்ட போது,மேலும் அவற்றைக் குறித்து அமீர் ஸாஹிபிடம் உரையாடினார்கள். அதன் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மஸ்ஜித் பைத்துர் ரஷீதுடைய வெளிப்புற வளாகத்தின் சுவரில் பொறிக்கப்பட்டிருந்த பலகையின் திரையை திறந்து வைத்து துஆவும் செய்தார்கள். துஆவிற்கு பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது தங்குமிடத்தின் பகுதி சென்றார்கள்.

1.29 மணியளவில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மஸ்ஜித் பைத்துர் ரஷீதிற்கு வருகை தந்து லுஹர் மற்றும் அஸர் தொழுகையை ஜமுஉ செய்து தொழ வைத்தார்கள்.

பிற்பகலில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அலுவலக தபால்கள் மற்றும் அறிக்கைகளைப் படித்தார்கள். மேலும் உரிய வழிகாட்டல்களை வழங்கினார்கள்.

ஹம்பர்க் நகரத்தின் பகுதியான stellingen - ல் அஹ்மதிய்யா ஜமாஅத் ஜெர்மனியின் முதல் மஸ்ஜித் 1951-ல் கட்டப்பட்டது. இந்த மஸ்ஜிதுடன் மிஷன் ஹவுஸ், அலுவலகம் மற்றும் தங்கும் பகுதியும் உள்ளது.

ஜமாஅத்தின் இந்த புதிய தலைமையகம் பைத்துர் ரஷீத் ஹம்பர்க் நகரத்தின் stellingen - ல் பகுதியில் 1994-ம் ஆண்டில் வாங்கப்பட்டது. இதன் மொத்த பரப்பளவு 2783- மர்பஃ மீட்டர் ஆகும். இந்தக் கட்டத்தில் மூன்று பெரிய ஹால்கள் இருக்கின்றன. இரண்டு ஹால்களை ஆண்கள் மற்றும் பெண்களுக்காக மஸ்ஜிதின் வடிவில் மாற்றப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி, இந்தக் கட்டடத்தில் அலுவலகம் மற்றும் குடியிருப்பு பகுதியும் இருக்கின்றது. ஹம்பர்க் ஜமாஅத்தின் இந்த தலைமையகம் முதல் தலைமையகமான மஸ்ஜித் ஃபஸ்லே உமரை விட பல மடங்கு பெரியதாகும். தற்போது இதே தலைமையக கட்டடம் மற்றும் பெரிய ஹால்களுக்கு முன்பு இருக்கும் பகுதியில் ஒரு மஹ்ராபி வாசலும் இரண்டு மினாராக்களும் கட்டப்பட்டுள்ளன. மேலும் தற்போது அதற்கு முறையாக மஸ்ஜிதிற்கான வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது.

**திறப்பு விழா நிகழ்ச்சி**

இன்று மாலை இந்த மினாராக்களின் திறப்பு விழாவின் அடிப்படையில் ஒரு நிகழ்ச்சிக்கான ஏற்பாடு பைத்துர் ரஷீதுடைய ஒரு பெரிய ஹாலில் செய்யப்பட்டிருந்தது. அதில் அரசாங்கத்தின் பல்வேறு துறைகளை

சார்ந்தவர்களையும், வாழ்வின் பல்வேறு துறைகளுடன் தொடர்பு கொண்ட விருந்தினர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

இன்றைய இந்த நிகழ்ச்சியில் ஜெர்மன் மற்றும் பல்வேறு சமுதாயங்களைச் சேர்ந்த 71 விருந்தினர்கள் கலந்து கொண்டிருந்தனர். அதில் ஹம்பர்க் மாநிலத்தின் சட்டப்பேரவையைச் சேர்ந்த பத்து பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜெர்மன் நாட்டின் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள், கீரீன் பார்டியின் அசெம்ப்ளி உறுப்பினர் Goetsch ஸாஹிப், ஹம்பர்க் காவல்துறையின் தலைவர் ஸாஹிப் மற்றும் ஜெர்மனியின் SDP, CDU, Green, FDP, Left என்ற ஐந்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், கத்தோலிகம், பிராஸ்டஸ்டன்ட், யூதம், இந்து, சீக்கியம் போன்ற மார்க்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் வாழ்வின் பல்வேறு துறைகளுடன் தொடர்பு கொண்டிருந்த உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப 6.10 மணியளவில் ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வருகை தந்தார்கள். ஹுஸுர் அன்வர் அவர்களின் வருகைக்கு முன்னதாக அனைத்து விருந்தினர்களும் தத்தமது இருக்கைகளில் அமர்ந்திருந்தார்கள்.

திருக்குர்ஆன் திலாவத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. அன்பிற்குரிய நாஸிர் ஜாவீத் ஸாஹிப் திலாவத் செய்தார்கள். மேலும் அதன் ஜெர்மானிய மொழியாக்கத்தை வாசித்துக் காட்டினார்கள். அதன் பிறகு ஹம்பர்க் ஜமாஅத்தின் உமூரே காரிஜா செயலர் மதிப்பிற்குரிய ஃபஸ்ல் அஹ்மத் ஸாஹிப் இந்த நிகழ்ச்சியின் அறிமுகத்தை செய்து வைத்தார்கள்.

இதன் பிறகு முதன் முதலில் ஹம்பர்க் மாநிலத்தின் ஐ.ஜி இன்ஸ்பக்டர் ஜெனரல் போலீஸ் Wolfgang அவர்கள் தமது உரையை நிகழ்த்தினார்கள். அவர் இவ்வாறு கூறினார்: ஜமாஅத்துடன் எனக்கு மிகவும் பழமையான மற்றும் நட்பு ரீதியிலான தொடர்புகள் இருக்கின்றன. இன்றிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நாம் இணைந்து ஒரு மரக்கன்றை நட்டிருந்தோம். அது தற்போது பெரிதாகி விட்டது. அது நமது நட்பிற்கான ஓர் அடையாளம் ஆகும். கட்டடத்திற்கு வெளியில் நீங்கள் இரண்டு மினாராக்களை கட்டியுள்ளீர்கள்; அவை இந்த நகரத்திற்கு பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ஏனெனில், இதில் மினாராக்கள் தொடர்பாக ஒரு பெரும் விவாதம் நடைபெற்றிருந்தது. சிலர் கூறுகின்றனர்: ஜெர்மனி எப்படிப்பட்ட ஒரு நாடு என்றால், இதில் அந்நிய நாட்டினர் அதிகம் இருக்கக் கூடாது. ஆனால், இது தவறானதாகும். இது எனக்கு கவலைக்குரிய ஒரு தருணம் ஆகும். அசல் விஷயம் என்னவென்றால், இஸ்லாம் ஒரு (தவறான) வடிவில் முன்வைக்கப்படுகிறது. நமக்குள் எத்தகைய மக்கள் கிடைப்பார்கள் என்றால், அவர்கள் மிகவும் நட்பு ரீதியிலான தொடர்புடையவர்களாக இருக்கின்றனர். நாம் இணைந்து உண்மையுடன் பணி செய்ய முடியும். மேலும் இந்த நகரத்தின் முன்னேற்றத்திற்காக பணி செய்ய முடியும்.

அன்னார் கூறினார்கள்: இது எனக்கு மிகவும் கண்ணியத்திற்குரிய விஷயம் ஆகும். அதாவது இன்று கலீஃபத்துல் மஸீஹ் நமக்கு மத்தியில் இருக்கின்றார்கள். இந்த மஸ்ஜிதில் இரண்டு மினாராக்கள் பதிக்கப்பட்டுள்ளன. அது தொடர்பாகவும் நான் எனது நல்விருப்பங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதன் பிறகு, Kazim Abaci ஸாஹிப் தனது உரையை முன்வைத்தவாறு இவ்வாறு கூறினார்கள்: அன்பிற்குரிய ஹுஸுர் அவர்களே! மற்றும் கண்ணியத்திற்குரிய ஜமாஅத்தின் உறுப்பினர்களே! நீங்கள் என்னை இங்கு அழைத்ததற்காவும், கண்ணியத்திற்குரிய விருந்தினர்களுக்கு மத்தியில் எனக்கு சிறிது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காகவும் நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். ஹம்பர்க் நகரம் பல்வேறு சமுதாயங்களின் தலைமையகம் ஆகும். இங்கு முஸ்லிம்கள், இந்துக்கள், யூதர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் இதர மார்க்கத்தைச் சேர்ந்த மக்கள் இருக்கின்றனர். மேலும் ஹம்பர்க் நகரத்தின் சிறப்பு இதுவாகும். அதாவது, பல்வேறு நாடுகளையும், மார்க்கங்களையும் சேர்ந்த நண்பர்கள் இங்கு இணைந்து ஒற்றுமையாக வசிக்க முடியும்.

அன்னார் கூறினார்கள்: பல்வேறு மார்க்கங்களுடைய ஒரு மாநாடு நடைபெற்றது. பரஸ்பர தூரங்களை அகற்ற வேண்டும் என்பதற்காகவும், மேலும் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் அனைவரும் அழைக்கப்பட்டிருந்தனர். பல்வேறு முஸ்லிம் பிரிவினர் ஒன்று கூடியிருந்தனர். நாம் இணைந்து பணியை முன்னேடுத்து செல்ல வேண்டும் என்பதில் அனைவரும் ஒருமித்தக் கருத்தை வெளிப்படுத்தினர்.

அன்னார் கூறினார்கள்: அஹ்மதிய்யா ஜமாஅத் எங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அது தீவிரவாதத்திற்கு எதிரானதாகும். மேலும் மார்க்கம் மற்றும் அரசியலை தனித்தனியாக வைக்க வேண்டும் என்று அது கூறுகின்றது. நாம் இன்ஷா அல்லாஹ் இந்த நகரத்தை முன்னேற்றுவோம். இறுதியில் அன்னார் மீண்டும் ஒருமுறை ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு நன்றி செலுத்தினார்கள்.

அதன் பிறகு, christa Goetsch; அன்னார் மாநில பாராளுமன்ற உறுப்பினரும், Grune கட்சியின் மாநில பொறுப்பாளரும் ஆவார்கள். மேலும் மாநிலத்தின் துணை கவர்னரும் ஆவார்கள். தனது உரையை முன்வைத்தவாறு அன்னார் கூறினார்கள்:

கண்ணியத்திற்குரிய கலீஃபத்துல் மஸீஹ் அவர்களே! கீரீன் பார்டி சார்பாக தங்களை வரவேற்பது எனக்கு இன்று மிகவும் மகிழ்ச்சிக்குரிய சந்தர்ப்பம் ஆகும். இங்கு இன்று இரண்டு மினாராக்கள் ஒளி வீசுகின்றன. இது நமக்கு மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயம் ஆகும். இந்த நகரத்தின் அழகு மற்றும் முன்னேற்றத்திற்காக பணி செய்வது நம் அனைவருடைய பரஸ்பர பொறுப்பு ஆகும். இந்த நகரத்தின் மஸ்ஜித்களும் இந்த நகரம் மற்றும் சமூகத்தின் அங்கமாக ஆகிவிட வேண்டும் ; மேலும் வெளிப்படையாக தென்பட வேண்டும்; பின்னால் திரையில் இருந்து விடக் கூடாது என்பது எமது விருப்பமாகும். நமது நகரத்தில் நூற்றுக்கும் அதிகமான மார்க்கங்களும், சமுதாயத்தின் மக்களும் வசிக்கின்றனர். நாம் அனைவரும் இணைந்து பணி செய்கின்றோம். மேலும் இதில் மஸ்ஜித்கள் மிகவும் நல்ல பணி செய்கின்றன. உங்களுடைய மஸ்ஜித் அனைவருக்காவும் திறந்து இருக்கின்றனது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம் ஆகும். அமைதி, சகோதரத்துவம் போன்றவற்றை நிலைநாட்ட ஜமாஅத் இங்கு மிகவும் முயற்சி செய்து கொண்டிருக்கின்றது. உங்களுடைய பள்ளிவாசல்களை அண்டை அயலார்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொள்கின்றனர் என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயம் ஆகும். எங்களது பள்ளிவாசல்கள் அனைவருக்காகவும் திறந்து இருக்கின்றது என்று இங்குள்ள ஸதர் ஸாஹிப் அவர்கள் உறுதி அளித்துள்ளார்கள். இதனாலும் நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளேன்.

ஹம்பர்க் நகரம் பல்வேறு சமுதாயங்கள் தங்களுக்குள் சந்திப்பதற்கும், ஒருவர் மற்றவரை ஈர்ப்பது ஆகியவற்றின் அடிப்படையிலும் ஓர் அடையாளமாக உள்ளது. நாம் இணைந்து இந்த பணியை முன்னெடுத்துச் செல்வது நமது கடமையாகும். இறுதியில் அன்னார் கூறினார்கள்: உங்களுடைய இந்த மஸ்ஜித் அமைதிக்கான இடமாக அமைய வேண்டும் என்பது எனது ஆசையாகும்.

இதன் பிறகு மாநில சட்டப்பேரவையின் உறுப்பினர் Thomas - s- kluth ஆவார்கள் . அன்னார் FDP பார்டியின் ஒரு பெரும் தலைவரும் ஆவார். அவர் தனது உரையை இவ்வாறு முன்வைத்தார்:

கண்ணியத்திற்குரிய கலீஃபத்துல் மஸீஹ் அவர்களே! இன்றைய இந்த நிகழ்ச்சியில் பங்கு பெறுவதற்காக தாங்கள் விடுத்த அழைப்பிற்காகவும், பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்கியதற்காகவும் நான் எனது பார்டியின் சார்பாக நன்றி கூறிக் கொள்கிறேன்.

அன்னார் கூறினார்கள்: ஹம்பர்க்கில் அமைந்துள்ள உங்களுடைய பள்ளிவாசல் என்பது மிகவும் அழகுவாய்ந்த பள்ளிவாசல்களில் ஒன்றாக இருக்கின்றது. இதனை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். உங்களது ஜமாஅத் பல ஆண்டுகளாக பணி செய்து கொண்டிருக்கின்றது. இஸ்லாம் கூறும் அமைதி, சகோதரத்துவம் மற்றும் சமத்துவத்திற்கான வழியை நீங்கள் தான் காட்டித் தந்துள்ளீர்கள். உங்களது ஜமாஅத் முன்னேறிக் கொண்டிருப்பது எனக்கு மகிழ்ச்சியாகும். நீங்கள் இரண்டாவது பெரிய மஸ்ஜிதை கட்டியுள்ளீர்கள். மேலும், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மஸ்ஜித்கள் எல்லாருக்காகவும் திறந்துள்ளது என்ற அறிவிப்பால் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த நகரத்தில், இந்தப் பகுதியில், பல்வேறு நகரங்களை சேர்ந்தவர்கள் பரஸ்பரம் இணைந்து ஒற்றுமையாக திகழ்வதற்கான வாய்ப்புகளும், நிகழ்ச்சிகளும் இங்கு நடைபெற வேண்டும். தற்போது நீங்கள் ஜெர்மன் ரெட்கிராஸ் அமைப்புடன் இணைந்து இரத்த தானம் கொடுக்கின்ற நிகழ்ச்சியை நடத்தியுள்ளீர்கள்; அது மிகவும் சிறந்த பணி ஆகும்.இதில் அதிகஅதிகமான மக்கள் பங்கு பெற வேண்டும்.

இறுதியில் அன்னார் கூறினார்கள்: நான் ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹம்பர்க் நகரத்திற்கு வருகை தந்ததில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். ஹுஸுர் அவர்கள் இங்கு வருகை தந்துள்ளார்கள்; மேலும் இன்று நாம் ஹுஸுர் அவர்களுடன் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ளோம். இதனால் நான் மிகுந்த

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 Thursday 13 - 20 June 2024 Issue No. 24 & 25

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

மகிழ்ச்சியடைந்துள்ளேன்.

பாராளுமன்ற உறுப்பினரின் Thomas அவர்களின் உரைக்குப் பிறகு மதிப்பிற்குரிய ஜெர்மன் அமீர் ஸாஹிப் அவர்கள் அறிமுக உரையை நிகழ்த்தினார்கள். இதன் பிறகு 6.40 மணியளவில் ஹுஸுர் அன்வர் அய்யதஹுல்லாஹ் அவர்கள் ஆங்கில மொழியில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதன் மொழியாக்கம் கீழே சமர்ப்பிக்கப்படுகின்றது:

## ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சொற்பொழிவு

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தஅவூது மற்றும் தஸ்மீயா போன்றவற்றிற்குப் பிறகு தமது உரையின் துவக்கத்தில் கூறினார்கள் கண்ணிய மிக்க விருந்தினர்களே. அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காதஹு.

இறைவனின் அருளும், கருணையும் உங்களுக்கு கிடைக்கட்டுமாக!

முதலில் எங்களது அழைப்பை ஏற்று இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ள அந்த விருந்தினர்கள் அனைவருக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். உங்களில் பெரும்பாலார் எங்களது ஜமாஅத்தை நன்கு அறிந்தவர்களாக இருக்கின்றார்கள் அல்லது அஹ்மதி நண்பர்களுடன் நல்ல நட்பு ரீதியிலான தொடர்பு கொண்டவர்களாக இருக்கின்றார்கள். மேலும் ஜமாஅத்துடன் சமீபத்தில் அறிமுகம் கிடைத்த நபர்களும் கூட தமது உள்ளங்களில் ஜமாஅத்தைக் குறித்து மேலும் அறிவதற்கு ஆர்வம் கொண்டிருக்கின்றனர். நீங்கள் அனைவரும் இங்கு வருகை தந்திருப்பது என்பது இந்த விஷயத்தை நிரூபணம் செய்கின்றது. அதாவது அஹ்மதி முஸ்லிம்களுடன் தொடர்பு வைப்பதிலும் அவர்களுடைய பள்ளிவாசல்களில் செல்வதிலும் எந்த ஆபத்தும் இல்லை என்பதை நீங்கள் அறிகின்றீர்கள். உண்மை என்னவென்றால், இஸ்லாத்தைக் குறித்து பெரும்பாலான செய்திகளும், அறிக்கைகளும் மிகவும் எதிர்மறையாக அமைந்துள்ள இன்றைய நாட்களின் சூழ்நிலைகளில் உங்களில் முஸ்லிம் அல்லாத நபர்களுக்கு இந்த விஷயம் சாத்தியமானதாக இருந்தது. அதாவது, மஸ்ஜிதிற்கு செல்வதால் நமக்கு கஷ்டங்கள் ஏற்பட்டு விடக் கூடும் என்று அவர்கள் அச்சம் கொண்டிருக்கக் கூடும். இன்னும் கூறப்போனால், பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கக் கூடும் என்று அவர்கள் அச்சப்படக் கூடும். எனினும் கூட இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ள நீங்கள் இந்த விஷயத்தை நிரூபணம் செய்கின்றீர்கள். அதாவது உங்களுக்கு அஹ்மதி முஸ்லிம்களின் பள்ளிவாசல்களுக்கு செல்வதில் எந்த அச்சமும் இல்லை. மேலும், நீங்கள் அவர்களை உங்களுக்கு ஆபத்தானவர்களாக கருதவில்லை.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் அனைவரும் இங்கு வருகை தந்திருப்பது இந்த விஷயத்தை நிரூபணம் செய்கின்றது. அதாவது, நீங்கள் அஹ்மதிகளுக்கு ஒரு கண்ணியம் வழங்குகின்றீர்கள். மேலும் அவர்களை தங்களைப் போன்றும் ஏனைய பெரும்பாலான மக்களைப் போன்றும் தூயவர்களாகவும், அமைதியானவர்களாகவும் கருதுகின்றீர்கள். ஆனால், இத்துடன் இந்த விஷயத்தையும் என்னால் மறுக்க முடியாது. அதாவது உங்களில் சில நபர்கள் இருக்கின்றனர்; அவர்கள் இன்று இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தாலும் அவர்கள் தமது உள்ளங்களில் சில சந்தேகங்களை கொண்டுள்ளனர். இந்த நிகழ்ச்சியின் எதிர்மறை விளைவுகள் ஏற்படக் கூடும் என்று அவர்கள் கருதுகின்றனர். மேலும் உங்களுக்கு தீவிரவாத சிந்தனைகளும், எண்ணங்களும் கொண்ட மக்களுடன் அமர நேரிடும் என்று நீங்கள் கவலை கொண்டிருப்பதற்கும் சாத்தியம் உள்ளது. உங்களில் எவராவது தமது உள்ளத்தில் இந்த எண்ணங்களை கொண்டிருந்தால் அவர் அவற்றை உடனடியாக களைந்து விடட்டும். நாங்கள் இந்த விவகாரங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்படுகின்றோம். மேலும், ஒருவேளை எப்படியோ ஒரு தீவிரவாத நபர் இந்த மஸ்ஜிதில் அல்லது எங்களது வளாகத்தில் நுழைவதற்கு முயற்சி செய்வார் என்றால், அந்நிலையில் நாங்கள் அவரை உடனடியாக வெளியேற்றி விடுவதற்கு கடும் நடவடிக்கை எடுப்போம். எனவே நீங்கள் பாதுகாப்பான கரங்களில் இருக்கின்றீர்கள் என்று நீங்கள் உறுதி கொள்ளுங்கள்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் எப்படிப்பட்ட ஜமாஅத் என்றால், ஒருவேளை அதனுடைய ஒரு நபர் ஓரிடத்தில் அல்லது ஒரு சந்தர்ப்பத்தில் தீவிரவாத சிந்தனையை வெளிப்படுத்தினார் என்றால், மேலும் சட்டத்தை பேணவில்லையென்றால், மேலும் (சமூக) அமைதியை சீர்குலைக்கின்றார் என்றால் பின்னர் அவர் ஜமாஅத்திலிருந்து வெளியேற்றப்பட்டு விடுகின்றார். இஸ்லாம் என்ற சொல்லின் காரணமாக இந்த கடும் நடவடிக்கை எடுக்கும் கட்டாயத்தில் நாங்கள் இருக்கின்றோம்.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

எங்களது ஜமாஅத் இஸ்லாத்தின் அசல் உயிரோட்டத்தின் முன்மாதிரியை முன்வைக்கின்றது. நாங்கள் செயல் வடிவில் வெளிப்படுத்துகின்ற இஸ்லாத்தின் உண்மையான அந்த சித்திரத்தின் செய்தியைக் குறித்து 1400 வருடங்களுக்கு முன்னதாக இஸ்லாத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுடைய ஒரு மகத்துவ மிக்க முன்னறிவிப்பில் கூறப்பட்டு இருந்தது.

அந்த முன்னறிவிப்பில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு காலம் வரும்; அப்போது முஸ்லிம்களின் பெரும்பான்மை இஸ்லாத்தின் உண்மைத்துவம் மற்றும் உண்மையான போதனையை மறந்து விடும். அது போன்ற நேரத்தில் அல்லாஹ் ஒரு நபரை சீர்திருத்தவாதியாக ஆக்கி அனுப்புவான். அவர் மஸீஹ் மற்றும் மஹ்தியாக இருப்பார்; இஸ்லாத்தின் சரியான வடிவத்தை உலகில் நிலைநாட்டுவதற்காக அவர் தோன்றுவார். இந்த முன்னறிவிப்புக்கு ஏற்ப அனுப்பப்பட்ட அந்த நபர் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோன்றுனராகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி அவர்களே ஆவார்கள் என்று அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைச் சேர்ந்த நாங்கள் ஈமான் கொள்கின்றோம். அல்லாஹ்வின் அருளினால் இந்த ஜமாஅத் உலகம் முழுவதும் 202 நாடுகளில் பரவி விட்டது. இந்த அனைத்து நாடுகளிலும் பல்வேறு தரப்பட்ட நிறம், இனத்தைச் சேர்ந்த எல்லா தரப்பு மக்களும் இந்த ஜமாஅத்தில் இணைந்துள்ளனர். மேலும் ஜமாஅத்தில் இணைந்ததுடன் அவர்கள் தத்தமது நாடுகளில் ஒரு நன்றியுணர்வு மிக்க குடிமகனின் பொறுப்புகளையும் அவர்கள் திறம்பட நிறைவேற்றுகின்றனர். இஸ்லாத்துடனும், தமது நாட்டுடனும் அவர்களுக்கு இருக்கின்ற அன்பில் பரஸ்பரம் எந்த மோதலும் இருப்பதில்லை. இன்னும் கூறப்போனால், இந்த இரண்டு அன்பும் ஒன்றுக்கொன்று பிணைந்துள்ளன. அஹ்மதி முஸ்லிம்கள் எங்கெல்லாம் இருக்கின்றார்களோ அவர்கள் தமது முழு

தொடர்ச்சி 13-ம் பக்கம்...

**National Watch Company**
**Sales & Service**

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad